# தினக்குரல்

யாழ்

தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 253 திங்கட்கிழமை 22 நவம்பர் Monday 22th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## மேலும் 19 பேர் உயிரிழப்பு

நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தினார்.

இவர்கள் அனைவரும் நேற்று முன் தினம் உயிரிழந்தவர்கள் என அவர் குறிப்பிட்டார். பக்கம் 03

## அரச ஊழியர்களுக்கு வாய்ப் பூட்டு

நிர்வாகத்திற்கு எதிர்மறையான பரப்புரையை தடுக்கும் ஒரு புதிய நகர்வாக சமூக ஊடக தளங்கள் மூலம் அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டுமென்ற ஒரு''வாய்ப்பூட்டு போடும் பக்கம் 02

## மாவீரர் நினைவேந்தல் தடை கோரி யாழ்.நீதிமன்றங்களில் தொடர் மனு

**-பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்களில் இன்று பரிசீலனை-**

மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலும் சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் மல்லாகம் பக்கம் 02

## மாவீரர் வார ஆரம்ப நாளில் யாழில் புலிகளின் குண்டு மீட்பு



மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணை - அம்பிகா நகர் பகுதியில் இருந்து நேற்று விடுதலைப் புலிகளின் தயாரிப்பு எனக் கருதப்படும் கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் பக்கம் 02

# மாவீரர் துயிலுமில்லங்கள் அருகே படைக் குவிப்பு

**- வட கிழக்கில் கண்காணிப்பு, சோதனைகள் தீவிரம் -**

**- துயிலுமில்லம் இல்லங்களுக்குள் நுழைய தடை -**







மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமான நிலையில் வட, கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அருகே படைத் தரப்பினர் களமிறக்கப்பட்டு கண்காணிப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், வீதிச் சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான வீதித் தடைகள் கொரோனாவை காரணம் காட்டி அமைக்கப்பட்டி பக்கம் 02

## யாழில் காய்ச்சலால் 6 வயது சிறுமி மரணம்

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஆறு வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

செம்பியன்பற்று மருதங்கேணி பகுதியைச் சேர்ந்த பாஸ்கரலிங்கம் பக்கம் 02

## உழவியந்திரத்தில் இருந்து வீழ்ந்து 5 வயது சிறுவன் பலி

**ஓமந்தையில் பரிதாப சம்பவம்**

வவுனியா - ஓமந்தை, பாலமோட்டை பகுதியில் உழவியந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து 5 வயது சிறுவன் ஒருவன் நேற்று பலியான துயர சம்பவம் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் உள்ள காணியொன்றினை உழவியந்திரத்தின் மூலம் பண்படுத்தும் நடவடிக்கை பக்கம் 02

## வீட்டில் தனித்திருந்த பெண்ணை கட்டிவைத்து தாக்கி கொள்ளை

**-முல்லைத்தீவில் 25 இலட்சம் பெறுமதியான நகை, பணம் அபகரிப்பு-**



முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை கட்டிவைத்து தாக்கி விட்டு வீட்டில் இருந்த பக்கம் 02

## அடாவடி நிதி நிறுவனங்கள் குறித்து தகவல் வழங்குங்கள்

**-யாழ். வந்த மத்திய வங்கி பிரதி ஆளுநர் தெரிவிப்பு-**




பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றாத வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை வழங்க முடியும் என இலங்கை மத்திய வங் பக்கம் 02

## அனைத்து பாடசாலைகளும் இன்று முதல் ஆரம்பம் பக்கம் 02

## தேசவழமை ,கண்டிய , முஸ்லிம் சட்டங்களிலிருந்து நல்லவை தெரிவு

**-ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி தலைவர் ஞாசார தேரர்-**



தேசவழமைச் சட்டம் ,கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லவற்றை மட்டும் எடுத்து சிறந்த புதிய சட்டத்தை உருவாக்குவோம் என ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார பக்கம் 02

## கனடாவில் சுமந்திரன் பங்கேற்ற கூட்டத்தில் கூச்சல் குழப்ப நிலை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் கனடா வருகைக்கு எதிராக நேற்று முன்தினம் சனிக் கிழமை (இலங்கை நேரப்படி நேற்று) கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றினை எம்.ஏ சுமந்திரன் கடந்தவாரம் பக்கம் 02

**-வரவு செலவுத் திட்டம்-**


## 2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று

இலங்கையின் 76 ஆவதும் கோத்தபாய ராஜபக்ச அரசின் 3 ஆவதும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் முதலாவதுமான 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பக்கம் 03

## சீனப் பசளைக் கப்பல் பின்வாங்கிறது இலங்கை

**-6.7 மில்லியன் டொலர் வழங்க தீர்மானம்-**

சீனாவின் சேதனப்பசளைக் கப்பல் தொடர்பில் தமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பக்கம் 03






## அரச ஊழியர்களுக்கு .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவை அரச ஊழியர்கள் பெற்றுள்ளனர்.

அரச உள்துறை அமைச்சின் உத்தரவை மீறினால் அவர்கள் மீது ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் விமர்சிப்பதாக எழுந்த முறைப்பாடுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர்கடந்த வாரம் வெளியிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரச துறைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் விமர்சிக்கும்அரச ஊழியர்கள் மீது கடுமையான தண்டனைகள் விதிக்கப்படலாமென சுற்றறிக்கையில் ஸ்தாபனகோவை சட்டத்தை மேற்கோள் காட்டி, சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் சிலரின் கருத்துக்கள் குறித்து தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் ஏற்கனவே விசாரணைகள் நடைபெற்று வருவதாக அமைச்சு கூறுகிறது.

மாவட்டச் செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள ஊழியர்களுக்கு இந்த உத்தரவு குறித்து தெரிவிக்க வேண்டுமென்று என்றுஅறிவிக்கப் பட்டுள்ளது.

புகார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் மீதான விமர்சனங்கள் முறைப்பாடுகளில் உள்ளடங்கியிருப்பதாகவும்உள்விவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர்,கூறியுள்ளார் .

கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கமான அரசாங்க சேவையைக் கொண்டிருப்பதேநோக்கம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இ ரசாயன உரத்திலிருந்து சேதன உரத்திற்கு மாறும் அரசாங்கத்தின் கொள்கையை விமர்சித்ததன் அடிப்படையில், பேராசிரியர் புத்தி மாரம்பவை அமைச்சில் அவர் வகித்த அனைத்து பதவிகளில் இருந்தும் கடந்த மாதம், விவசாய அமைச்சு, விடுவித்திருந்தது.

## தேச வழமை .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரர் தெரிவித்தார்.

ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்நடவடிக்கையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த செயலணியின் தலைவர் ஞானசார தேரர் மேலும் கூறுகையில்,

நாம் ஒன்றுபட எந்த அரசியல்வாதிகளும் விரும்பவில்லை. ஆகவே ஒரே நாடு ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை.போதைப் பொருளால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். விளக்கேற்றகேட்கும் அரசியல்வாதிகள் போதைப் பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்க தயாரில்லை. தமிழர்களது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள்?

கடந்த 19ஆம் திகதி அன்று கார்த்திகை விளக்கீடு நிகழ்விலே பாதுகாப்பு தரப்பினர் தலையீடு செய்தமை தொடர்பில் நாம் படையினரிடமிருந்து தகவல்களைப் பெறுவோம் என்றார்.

ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியில் தமிழர்களை முதலில் சேர்க்காமல் எதிர்ப்புக்கள் வந்த பின்னர் சேர்த்தமை தொடர்பாக கேள்வியெழுப்பிய பொழுது,

இந்த செயலணியை ஆரம்பித்தபோது பிரச்சினை ஒன்றாகவே இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் தமிழர்களை நியமிக்கவேண்டிய தேவையிருக்கவில்லை. பொதுவாகவே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஒரே பிரச்சினையே காணப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முஸ்லிம்களுக்கு பல சட்டங்கள் இருப்பதால் அந்த சட்டத்தை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர விரும்பினோம்.பல்வேறு சட்டங்கள் இருப்பதால் அதனை ஒரு சட்டமாக்க விரும்புகிறோம் .

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்லதையும் பெற வேண்டும்.கண்டியச் சட்டம் முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட்டத்தை உருவாக்குவோம்.எல்லா சட்டங்களிலும் இருக்கின்ற நல்ல விடயங்களை சேர்த்து ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

இந்தச் சந்திப்பில் ஒரு நாடு ஒரு சட்டம் செயலணியின் உறுப்பினர்களான யோகேஸ்வரி பற்குணராஜா, ஐயம்பிள்ளை தயானந்தராஜா உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.(ச-40)

## வீட்டில் தனித்திருந்த .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம்,நகை,தொலைபேசி என்பன நேற்று கொள்ளையிடப்பட்டன.

பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த பெண்ணின் வீட்டு வேலியை வெட்டி, முகங்களை மறைத்தவாறு நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் பெண்ணை கட்டி வைத்து, வாய்க்குள் துணியை அடைத்துவிட்டு வீட்டில் இருந்து சுமார் 25 இலட்சம் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர்

15 பவுண் நகை, 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் பெறுதியான தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனிமையில் கஸ்டப்பட்டு விவசாயம் செய்துவரும் தான் சீட்டு பிடிப்பதனூடாகவும் சிறிது சிறிதாக சேகரித்த பணம், நகைகளே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவித்த பெண் அடுத்த நாள் சீட்டு எடுத்தவருக்காக கொடுப்பதற்கு வைத்திருந்த 5 இலட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கூறினார்.

மூன்று பேர் கொண்ட கொள்ளைக்கும்பல் இந்த கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்ட பெண் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து தடையவியல் பொலிசார்கள், மோப்பநாய்கள் சகிதம் வீட்டுக்கு ஆய்வு செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (ச-71)

(மற்றுமொரு செய்தி பக்கம் 05 இல்)

## உழவு இயந்திரத்தில் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அதன் உரிமையாளர் ஈடுபட்டுள்ளார்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட குறித்த உழவியந்திரத்தின் சாரதி காணியின் உரிமையாளரது மகனையும் அவரது உறவினரது மகனையும் உழவியந்திரத்தில் ஏற்றியபடி நிலத்தினை பண்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது இரு சிறுவர்களில் ஒருவன் திடீர் என கீழே தவறிவீழ்ந்து உழவியந்திரத்திற்குள் சிக்கினார்.

படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும், உயிரிழந்துவிட்டதாக மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் பாலமோட்டை பகுதியை சேர்ந்த கந்தலதன் கனிஸன் வயது 5 என்ற சிறுவனே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-55)

## மாவீரர் நினைவேந்தல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்றிலும் வெள்ளிக்கிழமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை இந்த தடை உத்தரவு வழங்குமாறு பொலிஸாரினால் கோரப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் 120ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரமும் பொதுமக்களை ஒன்றுதிரட்டுவதற்கு தடை உள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு நீதிமன்றங்களிலும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளோர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனைத் தொடர்ந்து அந்த விண்ணப்பங்கள் மீது இன்று திங்கட்கிழமை கட்டளை பிறப்பிப்பதாக குறிப்பிட்ட நீதிமன்றங்கள், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்க உத்தரவிட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், தடை உத்தரவு கட்டளையை ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# அனைத்து பாடசாலைகளும் இன்று முதல் ஆரம்பம்

இலங்கையில் கொவிட் தொற்றால் இடைநிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்படாத தரம் 6 முதல் 9 வரையான மாணவர்களின் கல்வி நடவடிக்கை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் இதற்கு முன்னர் முதலாம் வகுப்பில் இருந்து 5ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கும் 10ஆம் வகுப்பில் இருந்து உயர்தரம் வரையான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய இன்றையதினம் முதல் பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளும் திறக்கப்படவுள்ளன. காய்ச்சல், சளி போன்ற நோய் அறிகுறிகள் கொண்ட மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதனை தவிர்க்குமாறு சுகாதார சேவை பணிப்பாளர் அசேல குணவர்தன பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர், அதிபர்களின் சம்பள பிரச்சினைக்கு ஜனவரி மாதத்தில் தீர்வு கிடைக்கவில்லை என்றாலும் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## கனடாவில் சுமந்திரன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டிருந்த நிலையில் அங்கிருந்து கனடாவுக்கு சென்றிருந்தார்.

கனடாவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் கனடா வருகைக்கு எதிராக கனடாவில் வாழும் தமிழ் மக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கனடா சென்றுள்ள சுமந்திரன், கனடாவில் உள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து பல்வேறு கலந்துரையாடல்களை நடத்த திட்டமிட்டிருந்தார். இந்நிலையில் கனடாவில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூட்டம் 45 நிமிடம் தாமதமாகத் தொடங்கியது.

அமைப்பாளர்கள் கூட்டத்தில் இருந்தவர்கள் தங்கள் கேள்விகளை வாய்வழியாக கேட்க முயன்றபோது எழுத்துமூலமாக எழுதுமாறு கூறியதால் சிறிது பதற்றம் ஏற்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பார்வையாளர்கள் எழுத்துமூலம் கேள்விகளைக் கேட்க முடியாது எனத் தெரிவித்த பின்னர் ஏற்பாட்டாளர்கள் வாய்மொழி கேள்விகளுக்கு அனுமதியளித்தனர் கூட்டமானது மட்டுப்படுத்தப்பட்ட பொதுமக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இதன் போது சிலர் கேள்விகளை கேட்டனர். இதற்கு பதிலளிக்கையில் வாதாப் பிரதிவாதம் ஏற்பட இதனால் அங்கு சற்று குழப்ப நிலை ஏற்பட்டு அது காரசாரமான விவாதமாக மாறவே கூட்டம் நடைபெற்ற மண்டபத்தில் பெரும் களேபரம் ஏற்பட்டது. இந்த நிலையில் மண்டபத்திற்குள் பிரவேசித்தவர்களும் கேள்விகளை கேட்க ஏற்பாட்டாளர்களுக்கும் அவர்களுக்குமிடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது.இவ்வேளையில் அங்கு பொலிஸாரும் வந்து சேர்ந்தனர். அவர்கள் அமைதிப்படுத்த முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில் சாணக்கியன் மற்றும் சுமந்திரனை மண்டபத்திலிருந்து வெளியேறுமாறும் இனி கனடா பக்கம் வரக்கூடாதென சிலர் கூச்சலிட்ட நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் கூட்டத்தின் பாதியில் பொலிஸார் வரவழைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து வெளியேறினர்.

## அடாவடி நிறுவனங்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியின் பிரதி ஆளுநர் திருமதி மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விசேட கலந்துரையாடலின் போது முதலீட்டாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

குறித்த நிகழ்வில் பங்குபற்றிய சிறு முதலீட்டாளர் ஒருவர் தான் வங்கியொன்றில் தொழில் முயற்சி நிமித்தம் கடன் பெற்றதாகவும் குறித்த கடனை கட்டுவதற்கு சிலகாலம் மத்திய வங்கியால் தவணை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். எனினும் கடன் பெற்ற வங்கி அதனை உரிய முறையில் அதனை பின்பற்றாமல் நெருக்கடி கொடுத்ததாகவும் அவா' தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கியின் கீழ் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் என்ற சுற்று நிருபங்கள் மட்டும் அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்பட வேண்டும்.

அவர்கள் அவ்வாறு செய்யப்படவில்லையாயின் இலங்கை மத்திய வங்கியின் பொதுமக்கள் தொடர்பு இலக்கமான 0112398542 மற்றும் dredcbsl.lk இணையதள முகவரியின் ஊடாக தங்களின் முறைப்பாடுகளை முன்வைத்தால் அதற்குரிய பரிகாரம் காணப்படும் என்றார். (ச-75)

## யாழில் காய்ச்சலால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுலோசனா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி கடந்த 15ஆம் தேதி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 19ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடிர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-18)

## மாவீரர் வார... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

51ஆவது படைத்தளம் தெரிவித்துள்ளது.

தனியார் ஒருவருக்கு சொந்தமான காணி ஒன்றில், பகுதியளவில் மண்ணில் புதைந்திருந்த இந்த கிளைமோர் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறித்த காணியின் உரிமையாளர் வெளிநாட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் காணிக்குள் வெடிகுண்டினை அவதானித்த பிரதேசவாசிகள் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அக்குண்டை மீட்ட இராணுவத்தினர் அதனை பலாலி இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அந்த குண்டில் கொல்பவன் வெல்வான், எதிரியின் பக்கம், தயாரிப்பு தமிழீழம் என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-75,40)

## மாவீரர் துயிலுமில்லங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தாலும் அதற்கு மேலதிகமாக அண்மையில் புதிய வீதித் தடைகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தண்ணீர் ஊற்று சந்தி ,ஒட்டுசுட்டான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் புதிய வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன இதனை விடவும் மாவட்டம் பூராக அமைக்கப்பட்டுள்ள சுமார் 15 இற்கு மேற்பட்ட வீதித் தடைகளில் வீதியால் பயணிப்போர் திடீரென சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு சிலர் பதிவு செய்யப்படுகின்றனர்.

இதனைவிடவும் வாகனங்கள் சோதனை செய்யப்படுவதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் ,வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்,கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லம்,முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம்,அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம்,தேராவில் மாவீரர் துயிலும் இல்லம்,மற்றும் இறுதி யுத்த காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம்,முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம்,இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம் என மாவடடத்தில் உள்ள துயிலுமில்லங்களை அண்மித்து வீதி சோதனை சாவடிகளை அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வட,கிழக்கில் உள்ள துயிலுமில்லவளாகங்களுக்குள் யாரும் நுழையாதவாறு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு கண்காணிப்பு மற்றும் சோதனைக் கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

(ச-71)

# வடக்கில் முதலில் களம் இறங்கியது ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணி

## -மக்களிடம் கருத்துக்கள் கேட்பு

ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியாவில் சனிக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் கருத்துக்களை கேட்டறியும் பணி முன்னெடுக்கப்பட்டது.

சட்டத்தரணிகள், தொழில் வல்லுநர்கள், மதத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்குச் சட்டத்தை சம அளவில் செயற்படுத்துவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களை கேட்டறிவது, இந்த ஜனாதிபதி செயலணியின் நோக்கமாக உள்ளது.இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் தொடரவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் ஏனைய எட்டு மாகாணங்களிலும் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டறிய எதிர்பார்த்துள்ளதாக செயலணி அறிவித்துள்ளது.

வவுனியா போகஸ்வெள பகுதியில் அமைந்துள்ள வட மாகாண சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் சங்கம் அலுவலகத்திலும் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் இவ்வாறு கருத்துக்களை கேட்டறியும் பணிகள் சனிக்கிழமை இடம்பெற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் வலம்புரி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்துக்கள் கேட்கப்பட்டன.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வந்திருந்தவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். நீண்டகாலமாகத் தங்களது மனங்களில் இருந்த எண்ணங்களை இதன்போது அவர்கள் செயலணியிடம் வெளிப்படுத்தினர்.

தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பொதுமக்களை ஜனாதிபதி செயலணியின் தலைவர் அதி. வண. கலகொடஅத்தே ஞானசார தேரர் பாராட்டியதோடு, ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பேராசிரியர் ஷாந்தி நந்தன வீரசிங்க, அய்யம்பிள்ளை ஆனந்த ராஜா உள்ளிட்ட செயலணியின் உறுப்பினர்கள், செயலணியின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளருமான ஜீவந்தி சேனாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகளைக் கருத்திற்கொண்டு, செயலணியின் நோக்கத்துக்கமைய அவற்றை ஆராய்ந்த பின்னர், அதன் அடிப்படையில் இலங்கைக்கு ஏற்ற வகையில் செயற்திட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதற்காக, 2021 நவம்பர் 30ஆம் திகதியன்று இந்தச் செயலணி உருவாக்கப்பட்டது. ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணி த.பெ. எண். 504, கொழும்பு. என்ற முகவரிக்கு அல்லது ocol.consultations@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, உங்களுடைய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அனுப்பி வைக்க முடியும். இன்று முதல், தனிப்பட்ட முறையிலும் இச்செயலணிக்கு கருத்துகளைத் தெரிவிக்க முடியும் என்று செயலாளர் அறிவித்துள்ளார். (40,75)

### 2 ஆம் வாசிப்பு .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட சட்டமூலம் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு – செலவுத்திட்ட உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் இன்று 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவு – செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையிலேயே இன்று மாலை 5 மணிக்கு இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இந்த விவாத நாட்களிலும் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி,தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே .வி.பி. ஆகியன கடுமையாக எதிர்த்து விமர்சித்து வரும் நிலையில் இக்கட்சிகள் இன்று வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவுள்ளன. இவைகளுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி கட்சிகளும் எதிர்த்தே வாக்களிக்கவுள்ளன.

### சீன பசளைக் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி சீன நிறுவனம் கோரிய நிதியில் 75 சதவீதத்தை அதாவது 6.7மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்தி முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அத்துடன் அதே நிறுவனத்திடம் இருந்து புதிய பசளைகளை கொள்வனவு செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே கொழும்பில் ஊடகம் ஒன்றிடம் தொிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையில் ராஜதந்திர உறவுகளை பாதிக்க இடமளிக்கமுடியாது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

அனுமதியின்றி இந்தக்கப்பல் வந்துள்ளதாக இலங்கை தரப்பில் கூறப்பட்டது.

எனினும் வங்கிக்கடன் கடிதம் திறக்கப்பட்டதால், கப்பல் நாட்டிற்கு வந்துள்ளதாக சீன நிறுவனம் கூறியுள்ள நிலையிலேயே தற்போது முரண்பாடு எழுந்துள்ளதாக அவர் தொிவித்துள்ளார்..

இந்தநிலையில், சீன நிறுவனம் தமது கப்பலை திரும்ப அழைக்கவும், மாதிரிகள் மீது முறையான சோதனைக்குப் பின்னா் புதிய சேதனப்பசளைகளை வழங்கவும் இணக்கம் வெளியிட்டுள்ளது .

இதேவேளை ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்து வந்த இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ஒரு மெட்ரிக் தொன் பசளையை 446 டொலா்கள் என்ற விலையில் கொள்முதல் செய்வதற்கான கட்டளை செய்யப்பட்டது.

எனினும் தற்போது அதன் விலை 900 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளதாக கூறிய அவர், எனவே, ஒப்பந்தத்தை இரத்து செய்வது அதிக செலவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உத்தேச தீர்வுத் திட்டம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தொிவித்துள்ளார்

### மேலும் 19 பேர் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 12 ஆண்களும், 07 பெண்களும் உள்ளடங்குகின்றனர். அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 05 ஆண்களும் 03 பெண்களுமாக 08 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவரில் 07 ஆண்களும் 04 பெண்களுமாக 11 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,127 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நேற்று மேலும் 508 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். அதன்படி, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நபர்களின் எண்ணிக்கை 556,437 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொவிட் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 526,734 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# யாழில் பிரபல வர்த்தகர் கொரோனாவால் மரணம்

மானிப்பாயைச் சேர்ந்த சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் ஸ்தாபகரும்,பிரபல வர்த்தகருமான சு.சிவகுமாரன் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழில் காலமானார்.

இவர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தர்மகர்த்தாசபையின் பொருளாளராகப் பெரும் பணிகள் பலவும் செய்ததுடன் சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் மூலமாகப் பலருக்கும் வேலைவாய்ப்புக் கொடுத்தவராவார். கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த சில தினங்களாக இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் நேற்று முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# மாத்தறை சிறையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒரு தமிழர் தடுத்துவைப்பு

## -அவரை சந்தித்தார் கஜேந்திரகுமார் எம்.பி.-



மாத்தறை சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒரேயொரு தமிழரான வவுனியாவைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் என்பவர் பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளில் உள்ளவர்களுடன் தன்னையும் சேர்த்துக்கொள்ளுமாறு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். மாத்தறை சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டு தங்கவேல் நிமலனை சந்தித்த பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள வவுனியாவைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் என்பவரை மாத்தறை சிறைச்சாலைக்கு சென்று சந்தித்தோம்.

அவர் சார்ந்த வழக்கிலே மூன்று சந்தேகநபர்கள் இருக்கின்ற நிலையில் அவரை மாத்திரம் தனிமைப்படுத்தி மாத்தறை சிறைச்சாலையிலே வைத்திருக்கின்றார்கள். ஏனைய இருவரும் கொழும்பிலே மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். அவர் தனிதமிழ்நபராக இங்கு வைக்கப்பட்டுள்ளார், அவருடைய மொழிசார்ந்த வசதிகளும் மிகவும் குறைவாக இருக்கின்றது. அவர் ஏனைய பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளில் உள்ளவர்களுடன் தன்னையும் சேர்த்துக்கொள்ளுமாறு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த வகையிலே அது சம்பந்தமாக அமைச்சர் அலிசப்ரி அவர்களோடு இந்த விடயத்தை பேசுவோம் என நாங்கள் அவரிடம் தெரிவித்திருந்தோம்.

தற்போது அவருக்கு நாங்கள் தெரிவித்திருக்கின்ற விடயம் என்னவென்றால் கைதிகளை விடுவிப்பதற்கான அழுத்தங்களை நாங்கள் தொடர்ந்தும் கொடுப்போம் ,ஆனால் அதே வேளை அது நிறைவேறும் வரைக்கும் கைதிகளை தங்கள் சொந்த ஊருக்கு கிட்ட இருக்கின்ற சிறைச்சாலைகளிற்கு மாற்றவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம்,இந்த விடயங்களை தொடர்ச்சியாக வரவு செலவுதிட்ட விவாத காலத்தில் கூட உரிய அமைச்சுகளிற்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி வலியுறுத்துவோம் என்பதையும் நாங்கள் அவருக்கு தெரிவித்தோம்.

# ஞானசார தேரரின் செயலணிக்கு முன்னாள் போராளிகளால் யோசனைகள் முன்வைப்பு

ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் முன்பாக புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் உள்ளிட்ட பல தரப்பினர்களும் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், யோசனைகள் ஆகியவற்றை முன் வைத்தனர்.

பொதுமக்களின் கருத்துகளை செவிமடுப்பதற்காக ஞானசார தேரர் தலைமையிலான செயலணி அதன் முதலாவது விஜயத்தை கடந்த சனிக்கிழமை வட மாகாணத்துக்கு மேற்கொண்டது.

வவுனியா, பொகஸ்வெள ஆகிய பிரதேசங்களில் அன்றைய தினம் பொதுமக்களின் கருத்துகள், அபிப்பிராயங்கள், யோசனைகள் பதிவு செய்யப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் வலம்புரி மண்டபத்தில் பொதுமக்களின் கருத்துகள், அபிப்பிராயங்கள், யோசனைகள் ஆகியவற்றை செயலணி பதிவு செய்தது.

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டோரில் கணிசமான தொகையினராக முன்னாள் போராளிகள் உள்ளனர். ஆயினும் இவர்களின் புகைப்படங்கள் வெளியில் வர கூடாது என்பதில் பற்றுறுதியாக உள்ளனர் என்று பெயர் குறிப்பிட விரும்பாத செயலணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# இரசாயன உரதை பெற்றுத் தருமாறு கோரி நுவரெலியா விவசாயிகள் பாரிய ஆர்ப்பாட்டம்

## -பல பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டு-



இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினியை அரசாங்கம் தடை செய்ததையிட்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினியை பெற்றுதரும்படியும் கோரியும் நுவரெலியா மாவட்ட விவசாயிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நுவரெலியா நகரில் நடத்தினார்கள்.

நுவரெலியா சுதந்திர விவசாய சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, நானுஓயா, மீப்லிமான, கலாபுரம், சீத்தாஎலிய மற்றும் லபுகலை உட்பட பல பிரதேசங்களில் இருந்து பெருந்திரளான விவசாயிகளும் நுவரெலியா, கந்தப்பளை மற்றும் இராகலை பிரதேசங்களிலுள்ள மரக்கறி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த எதிர்ப்பு பேரணி நுவரெலியா வெளிமட வீதியில் நானுஓயா சந்திக்கு அருகில் ஆரம்பித்து தர்மபால சுற்றுவட்டாரம், எலிசபெத் வீதி, கண்டி வீதி, பழையகடை வீதி மற்றும் புதிய கடை வீதி வழியாக நுவரெலியா பிரதான தபால் கந்தோருக்கு முன்னால் சென்று எதிர்ப்பு கூட்டம் நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட பேரணி நண்பகல் 12.45 மணியளவில் முடிவடைந்தது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா நகர வர்த்தக நிலையங்களும் கந்தப்பளை, இராகலை மற்றும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. நுவரெலியா சுதந்திர விவசாயிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு பேரணியில் எந்தவொரு அரசியவாதிகளும் கலந்து கொள்ளவில்லை.

# சிறிய, நடுத்தர முதலீட்டாளர்கள் சிக்கல்கள் குறித்து முறையிடலாம்

## -இலக்கத்தை அறிவித்தார் வடக்கு ஆளுநர்-

வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்ற நிர்வாக நீதியான பிரச்சினைகள் தொடர்பில் தனக்கு முறைப்பாடுகளை வழங்க வாட்ஸ்அப் இலக்கத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் வடமாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பங்குபற்றிய முதலீட்டாளர்கள் தமது குறைகளை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு வடக்கில் உள்ள அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் போதாது என்ற குற்றச்சாட்டை முன் வைத்தார்கள்.

தமது உற்பத்தி துறைகள் தொடர்பில் சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் தொழில் விரிவுபடுத்துதல்களை மேற்கொள்வதற்கு கீழ்மட்ட அதிகாரிகளின் செயற்பாடுகள் தமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துவதாக மன்னார் மாவட்டத்தில் இருந்து கலந்துகொண்ட முதலீட்டாளர் ஒருவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதுமட்டுமல்லாது யாழ்ப்பாண வணிகர் சங்கமும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பில் எடுத்த கூறியதுடன், வடக்கிலுள்ள வளங்களை பயன்படுத்துவதற்கு இங்குள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருக்கின்ற நிலையில் அதனை பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது பதிலளித்த வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தங்களின் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அது தொடர்பில் தனது வாட்ஸ்அப் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை வழங்க முடியும் என கூறி இலக்கத்தை வழங்கினார். (ச-75)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
திங்கட்கிழமை 22 நவம்பர் 2021 Monday 22nd November 2021

## மாணவர்களின் பாதுகாப்புக்கு அதிக முன்னுரிமை அவசியம்

இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றில் 20 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் பாடசாலைகள் படிப்படியாக திறக்கப்பட்டுள்ளன. ஆனால் கொரோனா வைரஸ்பெருந்தொற்று அபாயத்திலிருந்து இன்னும் முழுமையாக விடுபடாத நிலையில்பாடசாலைகளை திறந்து வைப்பதில்பல்வேறு சவால்கள் உள்ளன .ஆயினும் சமூகத்தில் வைரஸைப் பரப்புவதில் பாடசாலைகள் முக்கியப் பங்கு வகிக்கவில்லை என்பதையும், கோவிட்-19 பிள்ளைகளுக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தாது என்பதையும்சர்வதேச ரீதியிலான சான்றுகள் மிகவும் நம்பிக்கைக்குரிய வகையில்வெளிப்படுத்துவதாக மருத்துவ நிபுணர்கள்சிலர் கூறுகின்றனர் . பொதுவாக வயது வந்தோருடன் ஒப்பிடும்போது,பாடசாலை ஆசிரியர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படும் அபாயம் குறைவு என்பதைக் காட்டுவதற்கான சான்றுகளும் அதிகளவில் காணப்படுகின்றன எவ்வாறாயினும் தொற்றுநோயின் ஆபத்து இன்னரும் நீங்கிவிடவில்லை என்பதை கவனத்தில் கொண்டு பாதுகாப்பான நடவழக்கைகளை இறுக்கமாக கடைப்பிடிப்பது அவசியம். பாடசாலைகள் மூடப்பட்டதால் மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டது. எனவே,பாடசாலைக் கல்வி தடைகளின்றி முன்னெடுக்கப்படுவதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுப்பது அனைவரினதும் குறிப்பாக அரசாங்கத்தினது பொறுப்பாகும்.அதேவேளை நோய்த்தொற்றுக்கு இலக்காவோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் நாட்டில் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் மீண்டும் ஒரு அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாதென மருத்துவநிபுணர்கள் எச்சரித்துவருவதாலும் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளில் கடுமையான முறையில் சுகாதாரப்பாதுகாப்பு நடவழக்கைகளை கடைப் பிடிக்கவேண்டும்

பாடசாலைகள் திறக்கப்படுகின்றநிலையில் எதிர் நோக்கப்படும் சவால்கள் தொடர்பாகவும் அவற்றுக்கான பரிகாரங்கள் குறித்தும் இலங்கை கல்வி மன்றத்தின் இணை ஒருங்கிணைப்பாளர்களான கலாநிதி தாரா டி மெல், கலாநிதி சுஜாதா கமகே ஆகிய கல்விமான்கள் அரசாங்கத்திற்கு சில முக்கியமான ஆலோசனைகளை வழங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. தொற்றுநோய்பரவலை குறைப்பதற்கு பாடசாலைகளில் தகுதியுள்ள அனைத்து பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கு தடுப்பூசி போடுமாறும் சுகாதார மற்றும் இடைவெளிபேண வேண்டிய தேவைப்பாட்டை வலியுறுத்துவதைத் தொடருமாறும் சுய-பரிசோதனைக்காக குறைந்தவிலை,விரைவான அன்டிஜென் சோதனைக் கருவிகளின் கிடைப்பனவைஉறுதிப்படுத்துமாறும்பிரதேசசுகாதாரமருத்துவஅதிகாரியின்மேற்பார்வையுடன்பாடசாலைமட்டத்தில் முடிவெடுப்பதை அனுமதிக்குமாறும் அவர்கள் யோசனை கூறியுள்ளனர். இந்தியா, சிங்கப்பூர், பிரிட்டன், இஸ்ரேல், கனடா போன்ற பல நாடுகள் வழக்கமாக சுய பரிசோதனை அ ன்டிஜென் கருவிகளைப் பயன்படுத்துகின்றன. அவை பாட சாலைகளால் வழக்கமாக வழங்கப்படுகின்றன. அ ன்டிஜென் சோதனைக் கருவியை சிங்கப்பூரில் மருந்துக் கடைகளில் சுமார் இரண்டு இலங்கைநாணயத்தில்300 ரூபாவுக்கு வாங்கலாம், இந்தியாவில் அவை இன்னும் மலிவானவை.அன்டிஜென் சோதனைகள் வெவ்வேறு அளவு உணர்திறனைக் காட்டுகின்றன, ஆனால் ஏனைய அவதானிப்புகளுடன் இணைந்து. சுய-பரிசோதனை கருவிகள் நோய்த்தொற்றுகள் பரவுவதற்கு எதிராக வலுவான பாதுகாப்பை வழங்குகின்றனவென்றும் சுட்டிகாட்டப்பட்டிருக்கிறது .

அதேசமயம்பிள்ளைகளுக்கு ஒரு சில முக்கிய பாடங்களைத் தவிர ஏனைய சக ல பாடங்களுக்கான பரீட்சைகளையும் ஒத்திவைக்குமாறும் திறந்தவெளி செயற்பாடுகள் மூலம் ஏனைய பாடங்களை கற்பிக்க ஆசிரியர்களுக்கு சுதந்திரம் கொடுக்குமாறும் திறந்த அல்லது காற்றோட்டமான இடங்களில் வகுப்புகளை நடத்துமாறும் அவர்கள் யோசனை கூறியுள்ளனர். மேலும் முக்கிய பாடங்களை மொழிகள் மற்றும் கணிதத்திற்கு மட்டுப்படுத்தலாம், ஏனெனில் கற்றலின் ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான ஒரு குறிப்பிட்ட அளவிலான கல்வியறிவு மற்றும் எண்ணறிவு ஏனையபாடங்களைக் கற்க அவசியமென்று அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால்மாணவனை தனிமைப்படுத்துமாறும் ஆனால் பாடசாலையை மூடவேண்டாமெனவும் தொற்றுக்கிலக்கான பிள்ளையின் தொடர்புகளைக் கண்டறிந்து உடனடியாக அவர்களைச் சோதித்து, வழக்கமான சோதனைகளைப் பின்பற்றுமாறும் சோதனை எதிர்மறையாக இருக்கும் எவரையும்பாடசாலையில் இருக்க அனுமதிக்குமாறும் பெற்றோர் அல்லது நெருக்கமானவர்களுக்கு தொற்று ஏற்பட்டிருந்தால் சோதனை எதிர்மறையாக இருந்தால்பிள்ளையை பாடசாலைக்கு செல்ல அனுமதிக்குமாறும் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் அல்லது அந்த பகுதிமருத்துவ அதிகாரின் பரிந்துரைத்தபடி தொடர்ந்து சோதனை செய்யுமாறும் ஏனைய நாடுகளில் என்ன நடக்கிறது என்பதை இலங்கை ஆய்வுசெய்து, பாடசாலைகள் மூடப்பட்டு பிள்ளைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உள்கட்டமைப்பு வசதிகள் இருப்பதை உறுதி செய்வது.பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயமாகும். பாடசாலை நுழைவாயிலில் போதுமான தண்ணீர் வசதி அவசியமான அடிப்படை வசதிகளில் ஒன்றாகும். மலசலகூடங்களை தவறாமல் சுத்தம் செய்வதற்கான நடவழக்கைகள் மற்றும் போதுமான சுகாதார திரவங்கள், சவர்க்காரம் ஆகியவற்றின் தொடர்ச்சியான விநியோகத்துடன் பாடசாலையில் பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவது அவசியம்.அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை கடைப் பிடிப்பது வகுப்பறை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உபாயமாகும். உடல் இடைவெளியை பேணுதல் ,கூட்ட நெரிசலைத் தவிர்த்தல்முக்கியமாகும். வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 15 மாணவர்களாக மட்டுமே இருக்க வேண்டுமெனவும் 15க்கும் மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட வகுப்புகள் மாணவர்களை குழுக்களாகப் பிரித்துவெவ் வேறுநாட்களில் வகுப்புகள் நடத்தப்படுவது நடைமுறையில் உள்ளது.இதேவேளை கோவிட்-19மரணங்கள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க தடுப்பூசிகள் பெரும் பங்களிப்பை அளித்துள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, ஆதார அடிப்படையிலான விஞ்ஞானத்தை நம்புவதும் தடுப்பூசியைப் பெறுவதும் முக்கியம். எந்த மருந்தும் அதன் பக்க விளைவுகளைக் கொண்டுள்ளது. அதேபோல் கோவிட்-19 தடுப்பூசியும் உள்ளது. இருப்பினும், 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஒரு டோஸ் மட்டுமே எடுக்க வேண்டுமெனவும், அது பக்க விளைவுகளை உருவாக்கும் வாய்ப்புகளை கணிசமாகக் குறைக்குமென்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வித்துறை பேராசிரியர் இந்திக கருணாதிலக கூறியுள்ளார் .தற்போதையதருணத்தில் யாவற்றிலும் முக்கியமானது மற்றொரு அலை ஏற்படாமல் வருமுன் காத்துக்கொள்வதே.

# எவ்.பி.ஐ., அவுஸ்திரேலிய பொலிஸ் சாட்சியமளிக்கும் சாத்தியமுள்ளது



## பேராசிரியர் ரொஹான் குணரட்ண

**சலாபி-வஹாபிசத்தால் தீவிரமயப்படுத்தப்பட்ட தாக்குதலாளிகள் தாக்குதல்களை நடத்தினர். ஒரு சில அரசியல்வாதிகளால் பிரசாரம் செய்யப்பட்டதுபோன்று இந்தத் தாக்குதலில் எந்தவொரு அரசாங்கமும் சம்மந்தப்படவில்லை. முன்னைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் விசாரணையின் முக்கிய கண்டுபிடிப்புகளை பொதுமக்களுக்கு தெரிவிக்க தவறியதன் காரணமாகவே இந்த சதி கோட்பாடுகள் உருவாகின**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னதாக சஹ்ரான் ஹாஷிம் உட்பட தாக்குதல்நடத்தியவர்கள் கறு ப்பு உடை அணிந்து பதிவு செய்த காட்சிகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது . நியூசிலாந்தில் பிரார் த்தனையி லீடுபட்டிருந்த முஸ்லி ம்களை வெள்ளை மேலாதிக்கவாதியொருவர் கொன்றதற்கு பழிவாங்கும் வகையில் தான் காஃபிர்கள் (நம்பிக்கை இல்லாதவர்கள்) மீது தாக்குதல்களை நடத்தியதாக சஹ்ரான் கூறுகிறார். இந்த புதிய விடயங்கள்தொடர்பாக இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் குணரட் ணவினால் விளக்கப்பட்டுள்ளது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் விசாரணையானது சமஷ்டிவிசாரணை பணியகம் (எவ் .பி.ஐ) மற்றும் அவுஸ்திரேலியசமஷ்டி பொலிஸ் உள்ளடக்கிய ஒருபல் தேசிய முயற்சி என்று அவர் கூறியுள்ளார். தற்கொலைத் தாக்குதல் வேலைக்கான நிதியை மசாலா வாசனை திரவியங்கள் ஏற்றுமதியாளர் இப்ராஹிமின் இரு மகன்மார் இல்ஹாம் மற்றும் இன்ஷாப் ஆகியோரிடமிருந்து பெற்றுள்ளதாகவும் , அவர்களுக்கு வெளிநாடுகளோ அல்லது அரசாங்கமோ நிதி உதவி செய்வதில் ஈடுபடவில்லை என்பதை சி .ஐ ,டி ., ரி ஐ டி மற்றும் அவர்களது வெளிநாட்டு சகாக்களின் விசாரணைகள்,உறுதிப்படுத்தியுள்ளது .

இஸ்லாமிய அரசு கோட்பாட்டை மத்திய கிழக்கிலிருந்து சஹ்ரா னுக்கு அறிமுகப்படுத்திய திட்டமிடுபவராக செயற் பட்ட நௌஃபர் மௌலவி மற்றும் இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த மில்ஹான் ஆகியோர் மீது அமெரிக்க நீதித்திணைக்களத்தால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்கள். நீதிமன்ற விசாரணை தொடங்கும் போது எவ்.பி.ஐ. மற்றும் அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிசார் சாட்சியமளிக்க வாய்ப்புள்ளது என்று பேராசிரியர் குணரட்ண மேலும் கூறியுள்ளார் .

சஹ் ரானின் விடைபெறும் செய்தியின் ஒளிநாடா க் காட்சிகளில் மசாலா ஏற்றுமதியாளர் இப்ராஹிமின் இரண்டு மகன்மார் இன்சாஃப் மற்றும் இல்ஹாம் மற்றும் ஆறு பேர் உள்ளனர். அரபு மற்றும் தமிழில் பேசும் சஹ்ரான், கிறிஸ்தவர்களை இஸ்லாம் மற்றும் முஸ்லி ம்களின் எதிரிகள் என்று அடையாளப் படுத்துகிறார், மேலும் கிறிஸ்தவ தேவாலயங்களைத் தாக்கத் தயாராக இருப்பதாகவும், இந்த பணிக்கு முஸ்லிம்கள் மட்டுமே நிதியளித்ததாகவும் வெளிப்படையாகக் கூறுகிறார்.

ஹார்ட் டிரைவிலிருந்து மீட்கப்பட்ட இந்த காட்சிகள்சஹாரானின் குழுவால் வாடகைக்கு எடுக்கப்பட்ட,கல்கிசையில் டெம்ப்ளர்ஸ் வீதியிலுள்ள தொடர் மாடி குடியிருப்பில் சஹாரானின் குழுவால் எடுக்கப்பட்டதாக பேராசிரியர் குணரட்ண வெளிப்படுத்தினார்.சஹ் ரான் தனது பிரியாவிடை செய்தியில், சகோதரர்களே, முஜாஹிதீன்களே, உறுதியாக நிற்குமாறு நாங்கள்உங்களுக்கு சொல்கிறோம். காஃபிர்களை தப்புவதற்கு விடாதீர்கள், அவர்களைப் பற்றி அல்லாஹ் சொல்வதை மறந்துவிடாதீர்கள்.

எங்கள் மக்களைக் கொன்றுவிட்டு இங்கு விடுமுறையை அனுபவிக்க வருகின்றவர்களை நம்பாதீர்கள். இலங்கையின் காபிர்கள் சாதாரண ஆட்கள் அல்ல. அவர்கள் அல்லாஹ்வை நிந்திப்பவர்கள். அல்லாஹ்வின் பெயரை பன்றி வடிவில் எழுதி, அல்லாஹ்வுக்கு பிறப்புறுப்பு உள்ளது என்று எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இவர்கள். அல்லாஹ்வை இழிவுபடுத்தி எ மது குர்ஆனை எரித்தவர்கள். அந்த முஷ்ரிக்குகளைக் கண்டால் அவர்களைக் கொன்று விடுங்கள் என்று அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறார் . நீங்கள் அவர்களைச் சந்திக்கும்போது அவர்களைக் கொல்லுங்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே வாள் மட்டுமே பேச முடியும், வேறு எந்த கலந்துரையாடல்களும் இல்லை. பொதுமக்கள் மற்றும் இராணுவம் என்ற வேறுபாடு இல்லை. மனிதர்கள் நம்புவர்கள் என்றும் காபிர்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். நீங்கள் காபிராக இருந்தால் உங்கள் இரத்தம் ஹலால் ஆகாது என்று கூறுகிறார்

பதிவுகளை நேரடியாகவும் சதி கோட்பாடுகள் தவறென்பதைவெளிப்படுத்தவும் காட்சிகள் வெளியிடப்பட்டன. இந்தக் காட்சிகள் கிழக்கு மாகாணத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்,சஹ்ரானுக்கு பின் வந்த அவரின் இரு சகோதரர்களான ஸைனி மற்றும் ரில்வானின் ஹார்ட் டிரைவில் இது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் பேராசிரியர் கூறினார்.



இந்த ஒளிநாடா அவரது சகோதரர்கள் மற்றும் இரண்டாவது தாக்குதல்களுக்குத் திட்டமிடும் புதிய ஆட்களுக்கு ஒரு பெரிய உத்வேகமாக இருந்திருக்கும். இந்த காட்சிகள் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப் பப் பட் டு உண் மைத் தன் மை சரி பார்க் கப் பட் டுள் ள து. இன்ஷா அல்லாஹ், எங்கள் இரத்தத்தாலும், உடைந்த மண் டையோடு களாலும், சதையாலும் இங்கு இஸ்லாமிய அரசு நிறுவப்படும்.அபு பக்கர் அல்—பாக்தாதியின் கலிபாவுக்கு விசுவாசமாக மக்கள் கூட்டம் இருக்கும். எமது முயற்சி வீண் போகாது, அல்லாஹ்வுக்காகவும் அவரது து மார்க்கத்திற்காகவும் இதனை செய்கிறோம். எங்கள் தாக்குதலில் கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளன, நாங்கள் ஏன் அவற்றை குறி வைக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று சஹ்ரான் கூறியுள்ளார். பின்னர் அவர் பேசுகையில், நியூசிலாந்தில் எங்கள் மக்கள் மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது நீங்கள் அனைவரும் அவர்களைக் கொன் றீர்கள். அதற்கு நாங்கள் பழிவாங்குகிறோம், அல்லாஹ்வின் வீட்டின் மீது உங்கள் கரங்களை வைத்ததற்காக, அந்த தேவாலயங்களில் குண்டுவீசி உங்கள் அனைவருக்கும் பாடம் கற்பிப்போம். இதற்கான எங்கள் முயற்சி வீண் போகாது என்றுஅவர் கூறுகிறார் .

நாங்கள் எங்கள் சொந்த கைகளால் தயாரிக்கப்பட்ட வெடிபொருட்களை கொண்டு வருகிறோம். அந்த காபிர்களின் நிதியை நாங்கள் பயன்படுத்தவில்லை. நாங்கள் பயன்படுத்திய நிதி ஹராம் அல்ல. எந்த காபிர்களும் எங்களை ஆதரிக்கவில்லைஎங்களைப் போன்ற முஜாஹிதீன்களை காபிர் எப்படி ஆதரிக்க முடியும்? வெடிமருந்துகளை நாங்களே தயாரித்து உங்களிடம் கொண்டு வருகிறோம் என்று ம் கூறுகிறார்

எவ்.பி.ஐ. மற்றும் அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸ்,இலங்கை பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் உட்பட இலங்கை மற்றும் சர்வதேச புலனாய்வாளர்கள்உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையை முன்னெடுத்ததாக பேராசிரியர் குணரட் ண கூறியுள்ளார் . விசாரணைகளில்எவ்.பி. ஐ. மற்றும் அவு ஸ்திரேலிய சமஷ்டி பொலிஸ் மூலம்மேற்கொள்ளப்பட்ட தொலைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் ஏனைய சேகரித்துவைக்கும் சாதனங்களின் தடயவியல் பகுப்பாய்வு ஆகியவையும் அடங்கும். சலாபி வஹா பி சத்தை ஏற் றுக் கொண்ட முஸ்லிம்கள் மட்டுமே சஹ்ரானை ஆதரித்ததாகவும், பாரம்பரிய முஸ்லிம்கள்எவரும் சஹ்ரானை ஆதரிக்கவில்லை என்றும் விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர், கிழக்கு மாகாணத்திற்குச் சென்ற சஹ்ரானின் சகோதரர்கள் ஸ்ரீ தலதா மாளிகையின் கண்டி பெரஹரா உட்பட பல இடங்களில் குண்டுகளை வெடிக்கவைக்க திட்டமிட்டிருந்ததாக பேராசிரியர் குணரட்ண தெரிவித்தார். எனினும், இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் துரிதமாக அவர்களைக் கண்டுபிடித்திருந்தனர் , தாங்கள் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சுற்றி வளைக்கப்பட்டதைத் தாக்குதல் நபர்கள் அறிந்ததும், சாய்ந்தமருதில் தங்கள் உடலில் கட்டியிருந்த குண்டுகளை தாங்களே வெடிக்கச் செய்தனர். இப்ராஹிமின் மகன்களான இன்சாப் மற்றும் இல்ஹாம் ஆகியோர் வெல்லம்பிட்டியவில் உள்ள கொலோசஸ் செப்பு தொழிற்சாலையின் வளங்களைப் பயன்படுத்தி தாக்குதலுக்கு நிதியளித்ததாகவும் பேராசிரியர் குணரட்ன கட்டிக்காட்டினார். இல்ஹாமின் பிள்ளை களுக்கு தடுப்பூசி போடப்படவில்லை அல்லது பாடசாலைக்கு அனுப்பப்படவில்லை. அவர்கள் வீட்டில் கற்பவர்கள். சலாபி—வஹாபிசத்தால் தீவிரமயப்படுத்தப்பட்ட தாக்குதலாளிகள் தாக்குதல்களை நடத்தினர் மற்றும் ஒரு சில அரசியல்வாதிகளால் பிரசாரம் செய்யப்பட்டதுபோன்று இந்தத் தாக்குதலில் எந்தவொரு அரசாங்கமும் சம்மந்தப்படவில்லை . முன்னைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் விசாரணையின் முக்கிய கண்டுபிடிப்புகளை பொதுமக்களுக்கு தெரிவிக்க தவறியதன் காரணமாகவே இந்த சதி கோட்பாடுகள் தோன்றியதாகவும் பேராசிரியர் குணரட் ன கூறினார்.

விசாரணையாளர்களால் கர் தினாலுக்கு தொடர்ந்து விளக்கமளிக்கப் பட்டிருக்க வேண் டும் என்றும் அவர் குறிப்பிட்டார் . கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கை, பாராளுமன்றக் குழு அறிக்கை மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு ஆகிய மூன்று உண்மையை கண்டறியும் அறிக்கைகள் உயிர்த்த ஞாயிறு தொடர்பில் இருப்பதாகவும் பேராசிரியர் குணரட் ன சுட்டிக்காட்டினார். இந்த அறிக்கைகள் விரிவானவை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் அவர்களிடம் உள்ளன.இந்த அறிக்கைகள் பொதுமக்களுக்கோ அல்லதுஉரிய ஆட்களிடமோ திறம்படகொண்டுசெல்லப்படவில்லை என்று அவர் கூறினார். தகவல் வெற்றிடமே குண்டுவெடிப்பு பற்றிய சதி கோட்பாடுகளை ஒரு சில அரசியல்வாதிகள்கொண்டு வர வழி வகுத்தது.

சதி கோட்பாடுகள் ஒன்று கூடி வருவது அது தீவிரவாதத்தைஅகற்றும் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால்,விசாரணைகள் முடிவடையும் வரை காத்திருக்காமல் ஒளிநாடாவை வெளியிட முடிவு செய்ததாக பேராசிரியர் குணரட்ண கூறினார். நாங்கள் காவலில் உள்ளவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கவில்லை என்றால், அவர்கள் விடுவிக்கப்படும் போது, தாக்குதல்களை நடத்துவார்கள், தங்கள் சித்தாந்தத்தால் மற்றவர்களுக்கு பாதிப்பைஏற்படுத்துவதுடன் பயங்கரவாத உருவப்பிரதிமையின் ஓரங்கமாக இருப்பார்கள்.

அரசியல் ஆதாயங்களுக்காக ஒரு சில அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படும் இணையவழி பொய்கள் மற்றும் கையாளுதல்களை அரசாங்கம் தொடர்ந்து கண்காணித்து மறுப்பது முக்கியம்.அதேவேளை சோனிக் சோனிக் என்ற பெயர் குறித்தும் பேராசிரியர் குணரட்ண விளக்கினார். அது ஒரு உளவுத்துறை அதிகாரி என்று அவர் கூறினார். இலங்கை புலனாய்வுத்துறைக்கு இரண்டு முதன்மையான சேவைகள் உள்ளன, ஒன்று இராணுவ புலனாய்வு மற்றும் மற்றொன்று அரச புலனாய்வுஉயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்இரு சேவைகளும் 350 அறிக்கைகளை தயாரித்து அரசியல் தலைவர்களுக்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்தனர் ஆனால் அவர்கள் அதனை செய்யவில்லை.

உளவுத்துறை மற்றும் தகவல்களைதிரட்டும் முகவர்களில் சோனிக் சோனிக் ஒருவர். உலகளாவிய உளவுத்துறை அவதாரங்களை உருவாக்குகிறது,குறியீட்டு பெயர்களை உருவாக்குகிறது மற்றும் உண்மையான தீவிரவாதிகள் மற்றும்பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொள்கிறது. இப்போது சிறையில் இருக்கும் மத்தள சஹ்ரான் என்ற நபருடன் சோனிக் தொடர்பு கொண்டது. கட்டாரில்இருந்த அந்த நபர் தனது சகோதரருடன் ஆப்கானிஸ்தானுக்கு செல்ல திட்டமிட்டிருந்தார். அந்தத் தொடர்பாடல் கையாளப்பட்டு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. மற்றொரு சதி கோட்பாட்டை மறுத்த பேராசிரியர் குணரட்ண , சஹ்ரானின் மனைவி அளித்த ஐந்து வாக்குமூலங்களையும் மீளாய்வு செய்ததாக கூறினார்.

ஐந்து அறிக்கைகளில்எதுவும்உளவுத்துறை அதிகாரிகளை சஹ்ரான் சந்தித்ததாக குறிப்பிடவில்லை என்று அவர் கூறினார். மேலும், சஹ்ரானின் மனைவியை பேராசிரியர் குணரட்ணநேர்காணல் செய்தபோது, சஹ்ரான் எந்தவொரு புலனாய்வு அதிகாரியையும் சந்தித்ததாக அவர் சஹ்ரானின் மனைவி கூறவில்லை. உண்மையில், சஹ்ரான் ஒளிநாடாவில் புலனாய்வை 'நாய்கள்' என்று குறிப்பிட்டதாக பேராசிரியர் குணரட்ன தெரிவித்தார் முஸ்லிம் அடிப்படைவாத மயமாக்கலின் அச்சுறுத்தல் உண்மையானது என்று விளக்கிய பேராசிரியர் குணரட்ன, இராணுவம், சட்டஅமுலாக்கம் மற்றும் புலனாய்வு சேவைகள் அரசின் பாதுகாவலர்கள் என்றும், அடுத்த தாக்குதலை நிறுத்துவதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

சிலோன் டுடே



# டிப்போ சந்தியில் விபத்து இருவர் படுகாயம்



கிளிநொச்சி டிப்போ சந்தியில் இடம்பெற்ற பாரிய விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுப் பகல் 12 மணியளவில் இடம் பெற்றுள்ளது. பரந்தன் திசையிலிருந்து கிளிநொச்சி நகருக்குள் நுழைந்த கன்டர் வாகனம், கட்டுப்பாட்டையிழந்து பேருந்து நிலையத்தில் தரித்திருந்த முச்சக்கரவண்டி மற்றும் காருடன் மோதியுள்ளது. இதன்போது விபத்தில் சிக்குண்ட இருவர் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மோதிய கன்டர் வாகனம் பகுதியளவில் சேதமடைந்ததுடன், முச்சக்கரவண்டி மற்றும் கார் ஆகியனவும் சேதமடைந்துள்ளன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில், கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முன்பாக பாதசாரிக் கடவையில், இடம்பெற்ற கோர விபத்தின்போது, பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்திருந்ததுடன், மற்றுமொரு மாணவி படுகாயமடைந்திருந்தார். அதிகரித்த வேகமும், கவனக் குறைவும் காரணமாக, இவ்வாறான விபத்துக்கள் கிளிநொச்சியில் பதிவாகி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (55)

## மன்னாரில் திடீரென அதிகரிக்கும் கொரோனா தொற்று

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், கடந்த 20 நாட்களில் 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர்பாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேலும் புதிதாக 18 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2, 816 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

## தனிமையிலிருந்த பெண்ணைத் தாக்கி பெறுமதியான பொருட்கள் கொள்ளை



முல்லைத்தீவு – முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணைக் கட்டிவைத்து வீட்டிலிருந்த பணம்,நகை,தொலைபேசி என்பன கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும், பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த இளம் குடும்பப் பெண்ணின் வீட்டிற்குள் நுளைந்த மூன்று கொள்ளையர்கண்; தங்களை அடையாளம் காணாதவாறு, முகத்தினை மூடியதுடன், வீட்டிற்குள் நுளைந்து வீட்டிலிருந்த பெண்ணின் கை,கால்களை கட்டிவைத்துவிட்டு வீட்டிலிருந்து சுமார் 25 இலட்சம் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துள்ளார்கள்.

கணவனைப் பிரிந்த நிலையில், தனது பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர். இந்த நிலையில், தனிமையில் இருந்த பெண்ணிடமே, கொள்ளையடித்துள்ளார்கள். இந்தச் சம்பவத்தில் 16 பவுண் நகை, மற்றும் 5 இலட்சம் ரூபா பணம், பெறுதியான தொலைபேசி என்பனவும்,கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, தடயவியல் பொலிஸார் வரவளைக்கப்பட்டு, திருடர்களின் தடயங்கள் எடுக்கப்பட்டதுடன், இது தொடர்பிலான விசாரணைகளை, முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளார். (15)

## மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணைய வழி பன்னாட்டு அரங்க கதையாடல் மஹாகவி உருத்திரமூர்த்தி அரங்க நிகழ்வு எதிர்வரும் 23,24,25 ஆகிய திகதிகளில் இரவு 7மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் நாளை 23 ஆம் திகதி பேராசிரியர் பாலசுகுமார் புதியதொரு வீடு நாடகக் கட்டமைப்பும் படைப்பாக்கமும் 24 ஆம் திகதி புதன்கிழமை எழுத்தாளரும், இலக்கியச் செயற்பாட்டாளருமான, கலாநிதி குணேஸ்வரன் வானொலி நாடகங்களும்,

25 ஆம் திகதி வியாழக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் திருமதி அம்மன்கிளி முருகதாஸ் கோடைநாடகம் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளனர் .

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா விண்ட்சர் பல்கலைக்கழக பேராசிரியர் கவிஞர் சேரன் உருத்திரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளதுடன், நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவிருக்கிறார்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கமான 647334 8261 என்பதை அழுத்துவதுடன், கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு, புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஆமை இறைச்சியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு – முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஊற்றங்கரைப் பகுதியில், நான்கு கிலோ நிறையுள்ள ஆமை இறைச்சியினை விற்பனைக்கு கொண்டு சென்ற நபரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

புதறிக்குடா கிராமத்தினைச் சேர்ந்த நபரே, இவ்வாறு கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றின் பதில் நீதிவானின் வாசல் ஸ்தலத்தில், முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர். (15)

## மிகவும் வறிய குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு வழங்கி வைப்பு



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ், மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பத்திற்கு உதவும் வகையில், பசுமாடு வழங்கி வைக்கப்பட்டது.

இந்தக் குடும்பத்திலுள்ள 2 பிள்ளைகள் மிகவும் வறிய சூழலிலும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள நிலையில், மிகவும் கடினமான பொருளாதாரச் சூழலில் வாழும் இக் குடும்பத்திற்கு, வாழ்வாதார உதவியாக, 7 மாத சினை கொண்ட 10 லீற்றர் பால் வழங்கும், சுமார் 85,000 ரூபா பெறுமதியான பசுமாடு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரால்,வழங்கி வைக்கப்பட்டது.

இந்தக் குடும்பத்தின் தலைவர், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டும், கண்பார்வை குன்றிய நிலையிலும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மறைந்த முன்னாள் தவிசாளரின் அஸ்தி இறுதி ஊர்வலம் இன்று

கடந்த 13ஆம் திகதி கொரோனா தொற்றினால் உயிரிழந்த சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர் தேவசகாயம் பிள்ளையின் அஸ்தி இறுதி ஊர்வல நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அவரது உடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்ட பின்னர்.அஸ்தி தாங்கிய பேழையானது,யாழில் இருந்து எடுத்து வரப்பட்டு, சாவகச்சேரி நகரசபை முன்றலில் மரியாதைக்காக வைக்கப்படவுள்ளது.

அதன் பின் ஊர்வலமாக சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, சமய ஆராதனைகளின் பின்னர், கச்சாய் வீதியிலுள்ள, கத்தோலிக்க சேமக்காலையில் அஸ்தியானது நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரிக் கிளையினரின் ஏற்பாட்டில், குறித்த இறுதி ஊர்வல நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (13)

## தீவக கடற்பரப்பில் கடற்படையினரிடம் சிக்கிய 230 கிலோ கஞ்சா



தீவகப் பகுதிகளில் ஒன்றான பூவரசன் தீவுப் பகுதியில், சுமார் 230 கிலோ கஞ்சா நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை கடற்படையினரால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான படகு தென்படுவதை அவதானித்த கடற்படையினர்,அதனைச் சோதனையிட்டனர்.

அதன்போது, சந்தேகத்திற்கிடமான பொதிகள் இருப்பதை அவதானித்த கடற்படையினர், அதனைச் சோதனையிட்ட வேளை, அங்கு கஞ்சா இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (75, 40)

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரை நீதிமன்றில் முன்னிலையாகப் பணிப்பு



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஸை இன்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் கட்டளை அச்சுவேலி பொலிசாரினால் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தொடர்பில் நீதிமன்றங்களினால் தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில்; மாவீரர் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டே,இவ் அழைப்புக்கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவீரர் தினம் மற்றும் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் நினைவேந்தல் சுதந்திரத்திற்கு எதிராக பொலிசார் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறை உப தவிசாளர் கபிலனின் பெயரும் இவ் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

## பேருந்து சேவையை நிரந்தரமாக்குமாறு கோரிக்கை



கிளிநொச்சி – அக்கராயன் பிரதேசத்திற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவையினை நிரந்தரமாக்குமாறு, அக்கராயன் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த பத்தாண்டுகளாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவை அக்கராயன், முக்கொம்பன், பூநகரி யாழ்ப்பாணத்திற்கு பயணித்து வந்தது.

ஸ்கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதி சேதமடைந்ததன் காரணமாக இப்பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 5.45 மணிக்கு பயணத்தினைத் தொடங்கும் குறித்த பேருந்து, ஏ-9 சாலை வழியாக பயணித்து, திருமுறிகண்டி வழியாக அக்கராயனைச் சென்றடையும்.

பிற்பகல் 1.45 மணிக்கு அதே வழித்தடத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பயணிக்கும். இப்பேருந்து சேவையினால், கடந்த பத்தாண்டுகளாக போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்ட அக்கராயன் கிழக்கு, முல்லைத்தீவு அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவு, மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குறித்த பேருந்து சேவையினை நிரந்தரமாக நடத்துமாறு, அக்கராயன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. தற்போது அக்கராயனுக்கான வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதனால், அக்கராயன் மகா வித்தியாலயம், யுனியங்குளம் அ.த.க பாடசாலை, அமதிபுரம், ஆரோக்கியபுரம் பாடசாலைகள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் இப்பேருந்தின் மூலம் பயனடைந்துள்ளனர். (27)

## ஆலயச் சூழலில் தேங்கிநிற்கும் வெள்ளத்தினை அகற்றுமாறு கோரிக்கை



முல்லைத்தீவு – திருமுறிகண்டி ஆலயச் சூழலில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தினை அகற்றுவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடும் மழை நேரத்தில் கூடுதலான வெள்ளம் இப்பகுதியில் காணப்படுகின்றது.பெருமளவு வாகனங்கள் மக்கள் வந்து செல்கின்ற.இவ் ஆலயச் சூழலில், வெள்ளம் தேங்குவதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

திருமுறிகண்டியிலிருந்து வெள்ளம் வடிந்தோடுவதற்கான வாய்க்கால் வசதிகள் உருவாக்கப்படவில்லை. இதன் காரணமாக வெள்ளம் வடிந்தோட முடியாத நிலைமை, காணப்படுகின்றது.

வீதியில் தோன்றியுள்ள குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதனால், டெங்கு போன்ற அபாய நோய்கள் ஏற்படுவதற்கான சூழல் காணப்படுவதாகவும், மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

பெருமளவு மக்கள் வந்து செல்லும், இவ்விடத்தில், மழை வெள்ளத்தினை அகற்றுவது அவசியமானதென, பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (27)

# மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் யாழில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல்






இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

வட பிராந்தியத்துடன் தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பிராந்தியத்தின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குதல், மற்றும் சிக்கல்களை கையாள்வதற்கான சாத்தியமான தீர்வுகள் மற்றும் உத்திகள் வழங்குவதை நோக்காக கொண்டு, இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது முதலீட்டாளர்களின் பிரச்சினைகளைக் நேரடியாக கேட்டறிந்து கொண்ட மத்திய வங்கி ஆளுநர், அதற்கான தீர்வுகளை வட மாகாண ஆளுநர், அரச அதிபர்கள் மற்றும் வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்நிகழ்வில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா,யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன்,இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள்,வங்கிகளின் பிராந்தியப் பொது முகாமையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எனப்பலரும் பங்கேற்றனர். (40)

# மழை வெள்ளம் தொடர்பில் ஜனாதிபதியின் பொதுமக்கள் சேவைப் பிரிவுக்கு அறிவித்த நபர்கள்




சாவகச்சேரி பிரதேசசபையிலிருந்து 150மீற்றர் தொலைவில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட போதிலும், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அவ்விடயம் தொடர்பாக பிரதேசசபைக்கு அறிவிக்காது, ஜனாதிபதியின் பொதுமக்கள் சேவைப் பிரிவுக்கு அறிவித்துள்ளனர். சாவகச்சேரி பிரதேசசபைக்கு 150மீற்றர் தொலைவில் உள்ள இராமாவில் கிராமத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் தொடர்பாகவே இவ்வாறு ஜனாதிபதியின் பொதுமக்கள் சேவைப் பிரிவுக்கு அறிவித்து, குறித்த சேவைப் பிரிவினர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டதுடன், பிரதேசசபைத் தவிசாளருக்கும் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவர்கள் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் கருத்து வெளியிடும் போது, திட்டமிடப்படாத அபிவிருத்தியால் தான் வெள்ள அனர்த்தம் ஏற்படுகின்றது. இன்றும் அதே திட்டமிடப்படாத அபிவிருத்திகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன. ஆனால், அதைப்பற்றி வெள்ளம் வரும் போது மாத்திரமே, பேசுகின்றோம்.

நாம் பாரிய வளர்ச்சி அடைந்த நாடும் அல்ல.சில அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவை. இருப்பினும் மக்கள் படும் சிரமங்களைப் பார்த்துக்கொண்டும், இருக்க முடியாது. பல இடங்களில் இருந்தும் எமக்கு வெள்ள அனர்த்தம் தொடர்பான தொலைபேசி அழைப்புக்கள் வந்தன.

ஆனால், எமது சபையில் இருந்து வெறுமனே 150மீற்றர் தொலைவில் உள்ள இராமாவில் பகுதியில் தேங்கிய வெள்ளத்தை அகற்றுவதற்கு, எமக்கு அறிவிக்காது ஜனாதிபதி சேவைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களின் சிரமங்களைப் போக்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். அதுவே மனதிற்கு உத்வேகத்தை அளிக்குமென, அவர் மேலும் தெரிவித்தார். (13)

### தண்ணீர் வசதியின்மையினால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

கிளிநொச்சி-பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட நாச்சிக்குடா சந்தியில் பொது மக்களின் பாவனைக்காக அமைக்கப்பட்டுள்ள பொது மலசலகூடத் தொகுதிக்கு, தண்ணீர் வசதியின்மையால், அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக, பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளநொச்சி-பூநகரி ஏ-32 வீதியின் நாச்சிக்குடாச் சந்தியில் பல்வேறு தேவைகளுக்கும் கூடும் மக்களின் தேவை கருதி, நாச்சிக்குடா சந்தியில், அமைக்கப்பட்டுள்ள பொதுமசலசல கூடத்தினை இதுவரை பொதுமக்கள் பாவனைக்கு உரிய முறையில், கையளிக்கப்படவில்லையென, வர்த்தகர்கள் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.மேற்படி பகுதியில், அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்று 04 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், அதற்கான தண்ணீர் வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதனால், குறித்த மலசல கூடத் தொகுதியை பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாக, பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டியுள்ளனர். (55)

# தொழில் வாய்ப்பின்றி பெரும் சிரமத்தில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

முல்லைத்தீவு-தேராவிலில் வாழும் 80 வீதமான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி வாழ்வதனால், அவர்கள் அன்றாடம் சொல்லணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், தமக்கான வாழ்வாதார உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவின் கீழ் உள்ள தேராவில் கிராமத்தில் கடந்தகால யுத்த சூழ்நிலையினால், பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கால் ஏக்கர் காணிகள் வீதமும், அரை ஏக்கர் காணிகள் வீதமும் வழங்கப்பட்டு, குடியேற்றம் செய்யப்பட்டனர். இவற்றின் மூலம் தொழில் வாய்ப்பக்களைப் பெற்று, தமது குடும்பங்களை கொண்டு நடத்தினர். யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து, இங்குள்ள கூடுதலான குடும்பங்கள் யுத்தத்தில் தமது உழைப்பாளர்களை இழந்த நிலையிலும், கணவனால் கைவிடப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களும், தொழில் வாய்ப்புக்கள் இன்றி, பெரும் சிரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

போரில் அதிகம் பாதிக்கப்பட்ட இந்தப்பகுதி மக்களுக்கு இதுவரை முழுமையான எந்த வாழ்வாதார உதவிகளும் கிடைக்கவில்லை. இதனால், இங்குள்ள பலர் அன்றாட உணவிற்கே பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர். இதனால், சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல், வேட்டையாடுதல், கசிப்பு உற்பத்திகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை குடும்ப வறுமை காரணமாக பலர் தமது கல்வியைக்கூடத் தொடரமுடியாத நிலையில், அதிகமான சிறார்கள் உள்ளதாகவும், இதனைக்கருத்தில் கொண்டு தொழில்; வாய்ப்புக்களை பெற்றுத்தரவோ, அல்லது இக்கிராமத்தினை அண்டிய பகுதிகளில் தொழில் வழங்கும் இடங்களையோ ஏற்படுத்தித்தர வேண்டுமென, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (55)

# மத்திய வங்கி ஆளுநர் யாழ். விஜயம்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வசாவிளான் இயற்கை உரத் தோட்டம் உள்ளிட்ட சிலவற்றைப் பார்வையிட்டதுடன், பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

நேற்று இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் விசேட கலந்துரையாடலில், பங்கேற்பதற்காக, யாழ்ப்பாணம் வருகை தந்த மத்திய வங்கி ஆளுநரது, விஜயம் முக்கியத்துவமானதாகப் பார்க்கப்படுகின்றது. (40)

# வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021



'மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்.' நீ.தீ.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

# முல்லைத்தீவு பாடசாலைகளில் சிரமதானப் பணியில் இராணுவம்



முல்லைத்தீவு-பாலைப்பானி மற்றும் மன்னாகண்டல் ஆகிய பின்தங்கிய பாடசாலைகளில், இராணுவத்தினரால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 65 அவது படைப்பிரிவில் உள்ள 10 அவது, இலங்கை இலேசான காலாட் படைப்பிரிவினரின் சமூக உதவித் திட்டத்திற்கமைவாக, பலைப்பாணி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை வளாகம் மற்றும் அதனைசுற்றுப் புறச் சூழல் என்பன 'சிரமதானம்' பணிமூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, மன்னர் கண்டல் ஆரம்பப் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 64 ஆவது படைப் பிரிவின் 641 ஆவது பிரிகேட்டின் 14 வது இலங்கை சிங்கப் படையணி சிப்பாய்களினால், சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.


குறித்த சிரமதானப் பணிகளில், பெற்றோர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்களும் படையினருடன் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (55)

# மிகவும் வறிய குடும்பத்திற்கு குடிநீர் வசதி வழங்கி வைப்பு



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் கணவனை இழந்த நிலையில், மிகவும் நலிவான குடும்பச் சூழலில் 2 பெண் பிள்ளைகளுடன் வாழும் குடும்பத்திற்கு, ரூபா 52000 ரூபா செலவில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

# யானை வேலிகளை அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, மாங்குளம், கிழவன் குளம் ஆகிய பிரதேசங்களில் காட்டுயானைகளை கட்டுப்படுத்தும் வகையில், யானை வேலிகளை அமைத்துத் தருமாறு, பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவிற்கு உட்பட்ட பனிக்கன் குளம், மாங்குளம், கற்குவாரி கிழவன் குளம் ஆகிய பகுதிகளில் தினமும் காட்டுயானைகளின், தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக, யானைகளின் தொல்லை காரணமாகவே பனிக்கன்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீட்டுத்திட்டத்தில், மக்கள் முழுமையாக குடியேறி வாழ முடியாதெனவும், வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், பனிக்கன்குளத்தின் கீழ் உள்ள, வயல் நிலங்கள் மற்றும் கிழவன்குளம் ஆகிய பகுதிகளில் பயிர்செய்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலை, காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பனிக்கன்குளம் கிழவன்குளம் கற்குவாறி போன்ற பகுதிகளில், தமது வாழ்வாதாரச்செய்கைகளை மேற்கொண்டு வாழக்கூடிய வகையில், யானை வேலிகளை அமைத்துத்தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (55)

# படைத்தரப்பினரால் சிறார்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி வைப்பு





முல்லைத்தீவு-மாந்தை கிழக்கு அம்பாள் கிராமத்திலுள்ள பின்தங்கிய குடும்பங்களிலுள்ள சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக, கற்றல் உபகரணங்கள் மற்றும் உதவித்திட்டங்கள் அவர்களது பாடசாலைக் கல்வியின் முன்னேற்றத்திற்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 65 ஆவது படைப்பிரிவு தலைமையகத்தின் கீழ் உள்ள 652 வது பிரிகேட்டின் 10 ஆவது இலங்கை இலேசாயுத காலாட் படையணி படையினரால், மாந்தை கிழக்கு அம்பாள் கிராமத்தில், பிரதேசத்தில் உள்ள பின்தங்கிய குடும்ப சிறுவர்களின் பாடசாலைக் கல்வியின் முன்னேற்றத்திற்கான குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. தெற்கிலுள்ள நன்கொடையாளார் ஒருவரின் உதவியுடன், மேற்படி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (55)

# சுமந்திரனின் சட்டப்புலமை தமிழர்க்கு எதையும் பெற்றுக்கொடுத்திருக்கவில்லை

**-வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி-**

சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களிற்கு எதையும் பெற்றுக்கொடுத்திருக்கவில்லை எனவும் அறைகளிற்குள் விளக்கேற்றி படங்களை பிரசுரிப்பதை விடுத்து பொது வெளிக்கு வர வேண்டும் எனவும் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே இவ்விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் தினம். அதேபோல மே 18 ஆம் திகதி பொதுமக்களிற்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் இந்த இரண்டு நிகழ்வுகளையும் தடுத்து வந்திருக்கின்ற நிலையில் கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிற்கு முதல்நாள் சடுதியாக அந்த ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக செய்தியை கொண்டுவந்தார்கள்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டால் ஒரு கிழமை, மூன்றுநாள், ஐந்து நாள் என்று சென்ற நிலையில் உடனடியாக அதன் முடிவுகளை சொல்லி கொத்தணி உருவாகுவது போல் மாயை காட்டினார்கள்.

எங்களுடைய நிகழ்வுகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபொழுது, கொரோனாவை சாட்டாக வைத்துக்கொண்டு அவர்கள் பழிவாங்குகின்ற அல்லது குரல்வளையை நெரிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்த வருகின்றார்கள்.

கடந்த மாவீரர் தினத்திலும் இவ்வாறு நீதிமன்ற தடைகளை எடுக்கப்பட்டிருந்தது. இம்முறையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓடியோடி இந்த தடைகளை நீதிமன்றங்களில் பெற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் இந்த தடையை பொலிசார் கொண்டுவர விரும்பினால், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

இந்த விடயத்தை சவாலுக்குட்படுத்தக்கூடிய சட்டத்தரணிகள் குழாம் இருக்க வேண்டும். அந்த சட்டத்தரணிகள் குழாம் தமிழ்த் தேசியம் சார்ந்து விவாதிக்கவேண்டிய வேளை வந்திருக்கின்றது. மனமுவந்து சட்டத்தரணிகள் குழாம் இதற்கு தயாராக வேண்டும். நினைவுகூரல் என்பது மனித உரிமைக்குரிய ஓர் நிகழ்வு. அந்த நினைவுகூரலுக்கு கடந்த அரசாங்கமும் எமக்கு அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் கண்டும் காணாதும் இருந்தார்கள். அதனை எமது மக்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுது அதற்கு அனுமதிக்காத வகையில் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றது.

தடுப்பதற்கான முயற்சிகள் கடந்தவாரமே எடுக்கப்பட்டிருக்கின்றது. வழமையாக எந்த கடும் தேசிய தமிழ்க்கட்சிகளாக இருந்தாலும் பூட்டிய அறைக்குள் அல்லது தமது வளவிற்குள் நினைவேந்தலைசெய்து படங்களை பிரசுரிப்பதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் சுமந்திரனுடைய சட்டம், சட்ட புலமை தமிழ் மக்களிற்கு பயன்பட்டதாக இல்லை. ஏனைய தமிழ் கட்சிகளினுடைய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரனுடைய கட்சியாக இருக்கட்டும் எல்லோருமே ஒன்றுபட்டு இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு உடனடியாக இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று பேசப்பட வேண்டும்.




வெறுமனே வீட்டுக்குள் கொழுத்துவதென்பது பொருத்தமானதல்ல. நாங்கள் சொல்லாவிடினும் வீடுகளில் மாவீரர்களை நினைந்து அவர்கள் விளக்கேற்றத்தான் போகின்றார்கள். ஆனால், உலகிற்கு சொல்வதற்கு ஒரு பொது வெளியில் வரவேண்டும். சகல கட்சிகளிலும் சட்டத்தரணிகள் நிறையப்பேர் இருக்கின்றார்கள்.

இந்த முறையாவது அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களிற்குள் பேசி எவ்வாறு இந்த விடயத்தை விவாதத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பது இப்பொழுது தேவையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (55)

## முல்லைத்தீவில் மேலும் ஒரு கொரோனா மரணம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 44 அகவையுடைய மாறாஇலுப்பை நெடுங்கேணியினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே 20 ஆம் திகதி அன்று உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனா தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இவர் உயிரிழந்துள்ளார். இவரின் உடலம் கொரோனா விதிமுறைகளுக்கு அமைய எரியூட்டுவதற்காக நேற்று வவுனியா பூந்தோட்டம் மின்னெரிதகன மேடையில் எரியூட்டுவதற்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது. (15)

## தமிழரின் புனித மாதத்தை முன்னிட்டு வடமராட்சியில் மரக் கன்றுகள் நடுகை



தமிழர்களின் புனித மாதத்தை முன்னிட்டுச் சுவிஸ் சூரிச்சிவன் கோயில் சைவத்தமிழ்ச் சங்கத்தின் அன்பே சிவம் அமைப்பினரின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வரப்புயர மரநடுகைத் திட்டம் சிறப்பாக இடம்பெற்றது

தமிழர்களின் புனித மாதமான கார்த்திகை மாதத்தில் வடக்கு- கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசங்களின் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காகப் பல்லாயிரம் மரக்கன்றுகளை வருடாந்தம் நடும் திட்டத்தின் கீழ் வரப்புயர மரம் நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கில் பாடசாலை மாணவர்கள்,பொதுமக்களுக்கு மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பல இடங்களிலும் மரக் கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் அன்பே சிவம் அமைப்பின் தொண்டர்கள், கிராம மட்டத் தன்னார்வத் தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதேவேளை, வரப்புயர மரநடுகைத் திட்டம் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (18)

## துவிச்சக்கர வண்டிகள் வழுங்கல்

மைக்கல் நேசக்கரம் ஊடாக மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப் பட்டது.

மைக்கல் நேசக்கரம் ஊடாக யுத்தம் , இடர்காலங்கள் , மற்றும் ஏனைய காரணங்களினால் தாய் தந்தையை இழந்த மாணவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப் பட்டது. (21)



## சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் பிள்ளையார் பெருங்கதை




குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் பிள்ளையார் பெருங்கதை விரதத்தை முன்னிட்டுப் பெருங்கதைப் படிப்பும், விசேட பூசை வழிபாடுகளும் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

பிள்ளையார் பெருங்கதை விரத காலத்தில் தினமும் முற்பகல் 10 மணியளவில் ஆச்சிரம முன்றலில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான் சந்நிதான முன்றலில் பெருங்கதைப் படிப்பும், அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமானுக்குப் பூசை வழிபாடுகளும் இடம்பெறும் எனச் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் தெரிவித்தார். (18)

## 18 படிகளுடன் வரணியில் ஐயப்பன் ஆலயம் அமைப்பு

கொடிகாமம் – வரணி குடமியன் பகுதியில் சபரிமலை ஸ்ரீ தர்ம சாஸ்தாவுக்கு ஒரு புதிய ஆலயம் கட்டப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. சபரிமலையின் மஞ்சமாதா சந்நிதியின் மேல்சாந்தி பிரம்மஸ்ரீ எம்.என்.ரெஜிக்குமார் நம்புதிரியவர்கள் கும்பாபிஷேகத்தை கேரள தாந்திரிக முறைப்படி நடத்தி வைப்பார்.



## திடீரென முறிந்து விழுந்ததில் இரு இளைஞர்கள் படுகாயம்

**-40 அடி உயரத்தில் சொக்கப்பனை-**

சுதுமலை தெற்கு எச்சாட்டி ஞானவைரவர் ஆலயத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டுப் பாரியளவில் சொக்கப்பனை அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த போது சொக்கப்பனையின் மூங்கிலொன்று திடீரென முறிவடைந்து விழுந்துள்ளது. இதனால், அதனை அமைத்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.அத்துடன் மேலும் பலருக்குச் சிறுகாயங்கள் ஏற்பட்டது. குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை திருக்கார்த்திகை விளக்கீட்டு நன்னாளன்று பிற்பகல் நடந்துள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுதுமலை தெற்கு எச்சாட்டி ஞானவைரவர் ஆலயத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருநாளை முன்னிட்டு ஆலய முன்றலில் 40 அடி உயரமான சொக்கப்பனையைக் கடந்த வியாழக்கிழமை குறித்த பகுதி இளைஞர்கள் பலரும் இணைந்து அமைத்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது எதிர்பாராதவிதமாக சொக்கப்பனையிலிருந்த மூங்கிலொன்று முறிவடைந்தது. இதனால், சொக்கப்பனையும் திடீரெனச் சரிந்து விழுந்தது. சம்பவத்தில் அதன் மேலிருந்து அமைத்துக் கொண்டிருந்த அதேபகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் சொக்கப்பனையுடன் சேர்ந்து கீழே விழுந்ததில் படுகாயமடைந்தனர். சம்பவத்தில் மேலும் பலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

படுகாயமடைந்த இரு இளைஞர்களும் உடனடியாக மீட்கப்பட்டுத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, மேற்படி ஆலயத் தர்மகர்த்தாவின் அசட்டையீனமான செயற்பாடே குறித்த சம்பவத்துக்கு காரணம் எனப் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (18)

# பாரம்பரிய தொழில்களுக்கு பாதிப்பில்லாத முறையிலேயே கடலட்டை பண்ணைகள்

**-கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்-**

பாரம்பரிய கடற்றொழில்களுக்கு பாதிப்பில்லாத வகையிலேயே கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் 2 இலட்சம் சமுர்த்தி பயனாளர்களை தெரிவு செய்து வாழ்வாதாரத்தினை வலுவூட்டும் வேலைத் திட்டத்திற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்கள் மத்தியில் பாசி வளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான காசோலைகள் நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டன.

பூநகரியில் அமைந்துள்ள தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் பாசி வளர்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு முதற்கட்டமாக தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இதன்போது பயனாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள குறித்த திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளவர்கள். இதனை சரியான முறையில் பயன்படுத்தி நீட்சியான பொருளாதார நன்மைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் முடிந்தளவு கடலட்டைப் பண்ணைகளை உருவாக்கி கடற்றொழிலாளர்களுக்கு நிலையான பொருளாதாரக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கான வேலைத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், கடலட்டை பண்ணை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து அடையாளமிடும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த செயற்பாடு, பாரம்பரிய தொழில் முறைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போகின்றது என்ற கருத்து சில விசமிகளினால் பரப்பப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், நேற்று பூநகரிப் பிரதேச கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கலட்டைப் பண்ணைகள் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எந்தவொரு பாரம்பரிய தொழில் முறைகளையும் பாதிக்கும் வகையில் கடலட்டைப் பண்ணைகள் உருவாக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்ததுடன், குறுகிய நோக்கங்களுடனும் மக்களின் பிரச்சினைகள் தீராது இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களினாலும் வெளியிடப்படும் கருத்துக்களை கவனத்தில் எடுக்க வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (75)


சிறு விளம்பரங்கள்

ஆங்கிலக் கல்வி

ஆண்டு 6, 7, மாணவர்களுக்கு செவ்வாய், புதன், வியாழன் மாலை 4.00 இற்கு நடைபெறுகின்றன. (ஆரம்ப ஆங்கிலம்) ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார் நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. T.P. 0776751649



கண்ணீர் அஞ்சலி

வேலுப்பிள்ளை சிவயோகன்

எமது அலுவலகத்தில் ஆய்வு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.பி.ஜனனி அவர்களின் தந்தையார் வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்கள் கடந்த 07.11.2021 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்கு கொள்ளும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# இலங்கைக்கு அருகில் வந்த வெற்றியை பறித்தெடுத்து சிஷெல்ஸ் அணி சம்பியன்





இலங்கைக்கு எதிராக கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3 - 1 என்ற பெனால்டி முறையில் வெற்றிபெற்ற சிஷெல்ஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணத்தையும் சுமார் 60 இலட்சம் ரூபா பணப்பரிசையும் வென்று நாடு திரும்புகின்றது.

இலங்கைக்கு அருகில் வந்த வெற்றி விலகிச் சென்றதால் அரங்கில் குழுமியிருந்த 5,000 இரசிகர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இப்போட்டியில் 83 ஆவது நிமிடம் வரை 3 - 1 என்ற கோல்கள் கணக்கிலும் 90 ஆவது நிமிடத்தில் 3 - 2 என்ற கோல்கள் கணக்கிலும் இலங்கை அணி முன்னிலையில் இருந்தது.

ஆனால், அலாஜிக்கின் தவறான கெட்டபல்ட் தொழில்நுட்ப வியூகங்களினால் இலங்கை அணியின் மத்திய மற்றும் பின் களத்தில் 88 ஆவது நிமிடத்தில் செய்யப்பட்ட இரட்டை மாற்றங்களினால் சிஷெல்ஸ் அணி 90 ஆவது நிமிடத்தில் 3 ஆவது கோலை போட்டு கோல் நிலையை சமப்படுத்தி இலங்கையின் வெற்றியை இல்லாமல் ஆக்கியது.

இதனை அடுத்து வெற்றி அணியைத் தீர்மானிப்பதற்காக மத்தியஸ்தரினால் பெனால்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டு அதில் 3 - 1 என சிஷெல்ஸ் வெற்றி பெற்று சம்பியனானது.

இலங்கையினால் சம்பியன் பட்டத்தை சூட முடியாமல் போனமைக்கு அலாஜிக் பின்பற்றிய கெட்டபல்ட் தொழில்நுட்ப முறைமையே பிரதான காரணமாக அமைந்தது.

கோல் போட்ட ஆக்கிபை போட்டியின் 56 ஆவது நிமிடத்திலும் 3 - 2 என்ற கோல் கணக்கில் இலங்கை முன்னிலையில் இருந்த போது சலன சமீர, சமோத் டில்ஷான் ஆகியோரை 89 ஆவது நிமிடத்திலும் பயிற்றுநர் அலாஜிக் மாற்றியமையே இலங்கையின் தோல்விக்கு காரணமாக அமைந்தது என கால்பந்தாட்ட விமர்சர்கள் சுட்டிக்காட்டினர்.

சிஷெல்ஸுடனான லீக் போட்டியிலும் அலாஜிக்கின் தவறான வியூகங்களே இலங்கையின் தோல்விக்கு காரணமாக அமைந்திருந்தது.

நேற்றைய போட்டியின் 4ஆவது நிமிடத்தில் 30 யார் தூரத்திலிருந்து மார்வின் ஹெமில்டன் ப்ரீ கிக் மூலம் உதைத்த பந்து சிஷெல்ஸ் பின்கள வீரர் ஒருவரின் காலில் பட்டு கோலினுள் புக இலங்கை 1 - 0 என்ற கோல் கணக்கல் முன்னிலை அடைந்தது.

இதனால் உற்சாகமடைந்த இலங்கை அணியினர் கோல் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சித்தனர். ஆனால் அவர்களது முயற்சிகள் வீண்போயின.

இடைவேளையின் பின்னர் ஆக்ரோஷமாக விளையாடிய இலங்கை, 56 ஆவது நிமிடத்தில் ஹர்ஷா பெரேரா எறிந்த நீண்ட தூர த்ரோ இன் பந்தை மிக இலாவகமாக மொஹம்மத் ஆக்கிப் கோலினுள் புகுத்தினார்.

இந்த கோலினால் பெரு உற்சாகம் அடைந்த இலங்கை அணியினர் மேலும் கோல் போடுவதற்கு முயற்சித்தனர். ஆனால், கோல் போட்ட 2 நிமிடங்களில் ஆக்கிபை பயிற்றுநர் அலாஜிக் மாற்றியதால் ஆட்டத்தில் சிறு தடுமாற்றம் ஏற்பட்டது.

எவ்வாறாயினும் போட்டியின் 72 ஆவது நிமிடத்தில் சிஷெல்ஸ் பெனால்டி எல்லைக்குள் இழைக்கப்பட்ட தவறினால் இலங்கைக்கு பெனால்டி வழங்கப்பட்டது.

அந்தப் பெனால்டியை கோலாக்கிய வசீம் ராசீக், இலங்கை அணியை 3 - 1 என முன்னிலையில் இட்டார்.

ஆனால், சிசெஷ்ல்ஸ் அணியினர் தொடர்ந்து போராட்டக் குணத்துடன் விளையாடி 85 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை இனாமாகப் பெற்றது.

சிஷெல்ஸ் அணித்தலைவர் ஸ்டீவ் பெனட் மாரி பரிமாறிய பந்தைப் பெற்றுக்கொண்ட ஜியென் மார்க் ப்றெட் வலது பக்கத்திலிருந்து கோலை நோக்கி உதைத்தார்.

இலங்கையின் பெனால்டி எல்லைக்குள் பந்தைப் பெற்றுக்கொண்ட வுட்லி தம்பூ அதனை கோல் நோக்கி உதைத்தார். அப் பந்து சரித்த ரத்நாயக்கவின் தலையில் பட்டு திசை திரும்பி கோலினுள் புகுந்தது.

இதனைத் தொடர்ந்து 90 ஆவது நிமிடத்தில் வுட்லி தம்பூ கோல் போட்டு கோல் நிலையை 3 - 3 என சமப்படுத்தினார். போட்டி சமநிலையில் முடிவடைந்ததால் வெற்றி அணியைத் தீர்மானிப்பதற்காக பெனல்டி முறையை மத்தியஸ்தர் அமுல்படுத்தினார்.

சிஷெல்ஸ் வீரர் மெக்சிம் ப்ரன்ச்செட்டின் முதலாவது பெனால்டியை சுஜான் பெரேரா அலாதியாகத் தடுத்தார். ஆனால், சிஷெல்ஸ் வீரர்களான வுட்லி தம்பு, இம்மானுவல் ஜியேன், பெரி ஏர்னஸ்டா ஆகியோர் அடுத்த 3 பெனால்டிகளை கோலாக்கினர்.

இந்த சுற்றுப் போட்டியில் அதிகப்படியான 7 கோல்களைப் போட்ட வசீம் ராசீக்குக்கு தங்கப் பாதணியும் மிகவும் பெறுமதிவாய்ந்த வீரராக தெரிவான சுஜான் பெரேராவுக்கு தங்கப் பந்தும் வழங்கப்பட்டன.

## அணிக்கு எழுவர் ஆசிய றக்பி போட்டி ஹொங்கொங், ஜப்பான் சம்பியனாகின






துபாய் ஸ்போர்ட்ஸ் சிட்டி, துபாய் றக்பி மைதானத்தில் சனிக்கிழமை நிறைவுபெற்ற அணிக்கு எழுவர் ஆசிய றக்பி போட்டியில் ஆண்கள் பிரிவில் ஹொங் கொங்கும் பெண்கள் பிரிவில் ஜப்பானும் சம்பயினாகின.

இப் போட்டியில் சம்பியனான ஹொங் கொங், ஜப்பான் ஆகிய இரண்டு அணிகளுடன் இரண்டாம் இடங்களைப் பெற்ற தென் கொரியா, சீனா ஆகிய அணிகளும் தென் ஆபிரிக்காவின் கேப்டவுனில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள அணிக்கு எழுவர் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட தகுதிபெற்றுள்ளன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தென் கொரியாவை எதிர்த்தாடிய ஹொங் கொங் அபார ஆற்றல்களை வெளிப்படுத்தி 33 - 7 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு அணிக்கு எழுவர் ஆசிய றக்பி சம்பியனானது.

ஹொங் கொங் சார்பாக கா டோ காடோ லீ (2 ), ஹியூகோ ஸ்டைல்ஸ், மெக்ஸ் டென்மார்க், மைக்கல் கவர்டேல் ஆகியோர் ட்ரைகளை வைத்தனர். அவற்றில் 4 ட்ரைகளுக்கான மேலதிகப் புள்ளிகளை ரசல் வெப் பெற்றுக்கொடுத்தார்.

ஜப்பான் சார்பாக நாமுக் கிம் வைத்த ட்ரை வைத்ததுடன் அதற்கான மேலதிப் புள்ளிகளை அண்ட்றே ஜின் பெற்றக்கொடுத்தார்.

இப் போட்டிக்கு முன்பதாக நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சீனாவை 14 - 12 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்ட ஜப்பான் சம்பியன் பட்டத்தை சூடிக்கொண்டது.

ஜப்பான் சார்பாக ஹொனோக்கோ சுட்சுமி, யூமே ஹிரானோ ஆகியோர் ட்ரைகளை வைத்ததுடன் மிச்சாயோ சூடா மேலதிகப் புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார்.

சீனா சார்பாக கெயி சென், மிங்லின் டெங் ஆகியோர் ட்ரைகளை வைத்ததுடன் அவற்றில் ஒரு ட்ரைக்கான மேலதிகப் புள்ளிகளை யிங் ஸாஓ பெற்றுக்கொடுத்தார்.

ஆசிய றக்பி நிறுவனத்தின் தலைவர் காயிஸ் அல் தலாய் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை றக்பி ஆலோசனைக் குழுத் தலைவரும் ஆசிய றக்பியின் சுயாதீன உறுப்பினருமான அசங்க செனவிரட்ன ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இறுதிப் போட்டிகளைக் கண்டுகளித்தனர்.

# நடுவர், ரஞ்சன் மடுகல்லவின் 200 ஆவது டெஸ்ட் போட்டி




இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் போட்டி மத்தியஸ்தராக கடமையாற்றுவதன் மூலமாக டெஸ்ட் அரங்கில் 200 போட்டிகளில் போட்டி மத்தியஸ்தராக கடமையாற்றிய முதல் போட்டி மத்தியஸ்தர் என்ற சாதனையை படைத்தார் இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தற்போது ஐ.சி.சி. யின் பிரதான போட்டி மத்தியஸ்தராக கடமையாற்றும் ரஞ்சன் மடுகல்ல, 1993 ஆம் ஆண்டு போட்டி மத்தியஸ்தரர் பொறுப்பை ஏற்றார்.

அது முதல் இதுவரை காலமும் சிறந்த போட்டி மத்தியஸ்தராக அவர் கடமையாற்றி வருகிறார். இவரே ஐ.சி.சியின் முதலாவதும் ஒரேயொரு பிரதான போட்டி மத்தியஸ்தராகவுள்ளமை இலங்கைக்கு கிடைத்த பெருமையாகும்.

1982 முதல் 1988 வரையான 6 ஆறு ஆண்டு காலப்பகுதிகள் இலங்கைக்காக கிரிக்கெட் விளையாடியுள்ளதுடன், 2 போட்டிகளுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

தனது 29 ஆவது வயதில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெற்றிருப்பினும், தனது 62 வயதிலும் தொடர்ந்தும் கிரிக்கெட்டுக்காக பணியாற்றி வருகின்றமை விசேட அம்சமாகும்.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியானது போட்டி மத்தியஸ்தராக களம் காணும் இவரின் 200 ஆவது டெஸ்ட் போட்டி என்பதுடன், இதுவரை 369 சர்வதேச ஒரு நாள் போட்டிகளுக்கும், 125 சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளுக்கு போட்டி மத்தியஸ்தராக செயற்பட்டுள்ளார்.

மேலும், மகளிர் சர்வதேச ஒருநாள் அரங்கில் 14 போட்டிகளுக்கும், மகளிர் சர்வதேச இருபதுக்கு 20 அரங்கில் 8 போட்டிகளுக்கும் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்டுவரும் நூற்றுக்கும் மேற்பட்ட இருபதுக்கு 20 லீக் போட்டிகளுக்கும் போட்டி மத்தியஸ்தராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
J/KOPAY SARAVANPAVANANTHA VIDYALAYAM

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் - 05 புலமைப்பரிசில் 2020, க.பொ.த(சா/த) 2020 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுதல்.

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் 2020ல் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற மூன்று மாணவர்களையும் பாராட்டுவதோடு க.பொ.த(சா/த) பரீட்சையில் 88% சித்தியைப் பெற்று கோப்பாய் கோட்டத்தில் முதலாம் இடத்தினையும் யாழ் வலயத்தில் வகை- II பாடசாலையில் முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளார்கள். மேலும் பாடரீதியாக வணிகக் கல்வி, சித்திரம், தகவல் தொடர்பாடல் 100% சைவநெறி, தமிழ்மொழி, கணிதம், வரலாறு, விஞ்ஞானம் 96% ஆங்கிலம்82% பெற்று பாடசாலைக்கு புகழையும் பெருமைகளையும் பெற்றுத்தந்த மாணவச் செல்வங்களையும் பாராட்டுவதோடு சித்தி பெற உதவிய அதிபர்,ஆசிரியர்களையும், பெற்றோர், பழைய மாணவர்களையும் மனமாரப் பாராட்டுவதுடன் மாணவர்கள் மேலும் கல்வியில் உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.


செல்வி.ஜெகராசா அனுதீபா 185புள்ளிகள்


செல்வி.பத்மநாதன் ஜோதினி 165புள்ளிகள்


செல்வி.தில்லைநாதன் திரிசாலினி 160 புள்ளிகள்



வாழ்த்துவோர் :
சமூகசேவா சங்கம்
கோப்பாய் வடக்கு

# இலங்கையுடனான முதல் டெஸ்டில் அறிமுக வீரருக்கு ஏற்பட்ட சோகம்

காலியில் நடைபெற்று வரும் இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், பந்து தாக்கியதில் உபாதைக்கு உள்ளான மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் ஜெர்மி சோலோசானோ அம்பியூலன்ஸின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

போட்டியில் 24 ஆவது ஓவருக்காக ரோஸ்டன் சேஸ் பந்துப் பரிமாற்றம் மேற்கொண்டார்.

அந்த ஓவரின் நான்காவது பந்து வீச்சினை திமுத் கருணாரத்ன ஓங்கி அடித்தார். அந்த பந்து பிட்சுக்கு அருகிலிருந்த வகையில் களடுத்தடுப்பில் ஈடுபட்ட 26 வயதுடைய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அறிமுக வீரரான ஜெர்மி சோலோசானோவின் தலைக்கவசத்தை வேகமாக தாக்கியது. இதனால் ஜெர்மி சோலோசானோ மைதானத்தில் சுருண்டு வீழ்ந்ததுடன், தொடர்ந்து ஸ்ட்ரெச்சர் மூலம் மைதான வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அம்பியூலன்ஸுக்கு அழைத்து செல்லப்பட்டு பின்னர் ஸ்கேன் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்க 267 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. திமுத் கருணாரத்ன 132 ஓட்டங்களையும், தனஞ்செய டி சில்வா 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மருத்துவ விநியோக பரிந்துரை மீளாய்வுக் குழுவின் அனுமதியின்றி 10,193 மில்லியன் ரூபா மருந்து கொள்வனவு

## -தரம் உறுதிப்படுத்தப்படாத மருந்துகளால் நோயாளர்களுக்கு அளவிடமுடியாத பாதிப்பு-

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

2011 ஆம் ஆண்டு முதல் 2016 வரையான காலப்பகுதியில் மருத்துவ விநியோக பரிந்துரை மீளாய்வுக் குழுவின் (Formulary Revision Committee) அனுமதியின்றி 10,193 மில்லியன் ரூபா செலவில் 4,619 மருத்துவப் பொருட்கள் கொள்வனவு செய்துள்ளமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் தெரியவந்தது.

சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் மருத்துவ விநியோக செயற்பாடு தொடர்பில் 2018 மார்ச் 14 ஆம் திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்கு இந்தக்குழு கூடியது. உலகில் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தும் மருத்துவப் பொருட்களின் எண்ணிக்கை குறைவானதாக

காணப்பட்டாலும், இந்நாட்டில் 2017 ஆம் ஆண்டு வரை 19,844 மருத்துவப் பொருட்கள் நுகர்வுசெய்யப்பட்டுள்ளமை இங்கு தெரியவந்தது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 14 முறை 891 மில்லியன் ரூபா செலவு செய்து வியாபாரப் பெயரில் 8,945 Trastuzumab injection 440mg with solvent in 20ml vials உள்நாட்டு சந்தையில் தனியொரு விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குழுவில் புலப்பட்டது. இந்தக் கொள்வனவின் போது கொள்முதல் குழு குறைந்த விலைமனுவை நிராகரித்தமையால் 230.9 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது.


மேலும், கொள்முதல் செயற்பாட்டின் போது ஏற்படும் தாமதம் காரணமாக மருத்துவ பொருட்களுக்கு உருவாகும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அவற்றை உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டதால் 2007 முதல் 2017 வரையான 10 வருட காலத்தில் 5,166 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளமை தொடர்பிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு ஔடதஉற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சிடம் கேள்வியெழுப்பியது. தரம் உறுதிப்படுத்தப்படாமல் வருடாந்தம் மருத்துவப் பொருட்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மூலம் நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அளவிட முடியாது எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில்சுட்டிக்காட்டியது.

2016 ஆம் ஆண்டுவரை தேசிய மருந்துத் தரம் உறுதிப்படுத்தல் ஆய்வுகூடத்தில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திகளை மேற்கொள்ள 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரைநடவடிக்கை எடுக்காமை தொடர்பிலும் அதிகாரிகளிடம் குழு வினவியது.

கொள்வனவு செய்யப்படும் அனைத்து மருத்துவ பொருட்களினதும் மாதிரிகளின் தரத்தை ஆய்வு செய்வதற்கான முறை இல்லாமை, தரம் குறைந்த மருத்துவப் பொருட்களுக்கான அறவிடும்

முறையிலுள்ள பலவீனங்கள், தரம் குறைந்த மருத்துவப் பொருட்களை நோயாளர்களுக்கு வழங்கியுள்ளமை, மருத்துவப் பொருட்களின் கொள்கலன்களில் அரச இலட்சினை அச்சிடப்படாமை,மருத்துவப் பொருட்களின் களஞ்சியசாலைகள் உரிய தரத்தில் இல்லாமை, மருத்துவப் பொருட்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் பெற்றுக் கொண்ட பத்திரத்தை வழங்காமை (GRN), நன்கொடைகளாக கிடைக்கப்பெற்ற மருத்துவப் பொருட்களை உரிய முறையில் களஞ்சியப்படுத்தி விநியோகிக்காமை, மருத்துவப் பொருட்கள் காலாவதியாதல், மருத்துவப் பொருட்களின் முகாமைத்துவ தகவல் வலையமைப்பை (MSMIS) இற்றைப்படுத்தாமை போன்ற பல்வேறு சிக்கல்கள் தொடர்பில் இந்தக்குழுக் கூட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

# மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புதிய திரிபு அபாயம்



பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புதிய டெல்டா உப வைரஸ் திரிபு பரவும் அபாயம் அதிகமாக காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, புதிய டெல்டா திரிபின் உப பரம்பரை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவும் அபாய நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளுக்குள்ளும் வெளியிலும் மாணவர்கள் கூடுவதை கட்டுப்படுத்தி,நோய் பரவுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களுக்கு ஏற்படும் கொவிட் தொற்றுக்கு பின்னரான நோய் நிலைமையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் கால்விரல்களில் இரத்தக் கட்டிகள் உருவாகின்றமை தெரியவந்துள்ளது.

மேற்கத்தேய நாடுகளிலும் இவ்வாறான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இலங்கையிலும் சுமார் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசேட வைத்தியர் வருண குணதிலக தெரிவித்துள்ளார்.

# காப்போத்தலுக்கு விரைவில் தடை


விரைவில்; 180 மில்லிலீற்றர் கொள்ளளவு கொண்ட மதுபான காப்போத்தலுக்கு தடை விதிக்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பயன்பாட்டிற்குப் பின்னர் சுற்றுச்சூழலில் இவை வீசப்படுவதை தடுக்கும் முகமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2018 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 100 மில்லியனுக்கும் அதிகமான சிறிய போத்தல்கள் தனிநபர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவை பாவனையின் பின்னர் சுற்றுச்சூழலில் வீசப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு காரணம், இந்தப் போத்தல்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் மீள்சுழற்சி செய்யப்படுவதோ அல்லது மீண்டும் அவற்றை சேகரிக்கும் செயற்பாடுகளோ முன்னெடுக்கப்படுவதில்லையெனவும் சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# வீதிகளுக்கு காப்பட் இட முன்னர் ஏழைகளுக்கு உதவ முன்வாருங்கள்

## -கீதா குமாரசிங்க எம்.பி.-



வீதிகளுக்கு காப்பட் இட முன்னர், ஒரு நாளில் ஒரு வேளை உணவை மாத்திரம் உட்கொள்ளும் ஏழைகளுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

ஒரு நாளில் ஒரு வேளை உணவை மட்டுமே தேடிக்கொள்ளும் அப்பாவி மக்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு குறைந்தபட்சம் மூன்று வேளை உணவு வழங்குவதற்கு அரசாங்கம் ஏதாவது செய்ய வேண்டும்.

வீதிகளை அமைத்து, காப்பட் போடுவது நல்லது. ஆனால், அதற்கு முன், அவர்களின் பசியைப் போக்க ஏதாவது செய்ய வேண்டும். இது இவ்வாறிருக்க வரவு - செலவுத் திட்டத்தில் பெண்களுக்கு 3 வீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள வாக்காளர்களில் 52 வீதம் பெண்கள் என்பதால் பெண்கள் மீது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

# காலி கடலில் மீனவர் மாயம்;



காலி, மாகால்ல மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிப்பதற்காக படகில் சென்ற மீனவர் ஒருவர் கடலில் விழுந்ததையடுத்து காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் காலி துறைமுக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த மீனவர் கடலில் விழுந்து காணாமல் போயுள்ளமை படகு 400 கடல் மைல் தூரம் பயணித்த பின்னரே, ஏனைய மீனவர்களுக்குத் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# திருகோணமலை தலைமையக தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கொரோனாவால் உயிரிழப்பு

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் விசாரணை பிரிவில் கடமையாற்றி வந்த ஹப்புத்தளை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் உணவு ஒவ்வாமை காரணமாக கடந்த 19ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

ஆனாலும் ஒவ்வாமை காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும், இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

# தூபிகளை அமைக்க பயன்படுத்தும் நிதியை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்

## -இதுவே உண்மையான யுத்த வீரர்கள் நினைவு கூரலாக அமையும்-

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

இராணுவ வீரர்களுக்கு கௌரவமளிக்கும் வகையில் தூபிகளை அமைக்க பயன்படுத்தும் நிதியை யுத்தத்தால் விதவையான மற்றும் பிள்ளைகளை இழந்த பெண்களுக்காக ஒதுக்கினால் அதுவே உண்மையான யுத்த வீரர்கள் நினைவு கூரலாக அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் 5 ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டமானது ஒப்பந்தக் காரர்கள் போசனை அடையும் வகையிலேயே உள்ளது. அதில் மக்களின் பசியை தடுக்கும் வகையில் குறிப்பிடப்படவில்லை. இப்போது அரிசி, பருப்பு, பால்மா மற்றும் சமையல் எரிவாயு என்பனவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இப்போது எல்லா விடயங்களிலும் வரிசை யுகம் ஏற்பட்டுள்ளது. தேசிய திட்டமிடல் இல்லாத அரசியல்வாதிகளுக்கு பணம் கொடுக்கும் வரவு – செலவாக இது அமைந்துள்ளது.

தேசியப் பாதுகாப்புக்காகவே இந்த வரவு – செலவுத் திட்டத்தில் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்களின் அரசியல் தொனிப்பொருளாக தேசிய பாதுகாப்பு இருக்கின்றது. இரத்தம் சிந்தும் மனநிலையில் இருப்பதை போன்றதாகவே இந்த வரவு – செலவுத் திட்டம் இருக்கின்றது.

தேசியப் பாதுகாப்பு அரசியல் சுதந்திரம், தேச எல்லை, நாட்டு பூமியை பாதுகாக்க வேண்டும். ஆனால் அரசியல் சுதந்திர விடயத்தில் எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குகின்றனர். கொவிட் தொற்றுப் பரவும் என்று கூறுகின்றனர். அப்படியாயின் சந்தஹிரிசாய தூபியை திறக்கும் நிகழ்வில் தொற்றுப் பரவதா? அங்கு வரும் கொவிட் வைரஸ் 'சில்' எடுத்தா இருக்கின்றது.

அதேபோன்று தேச எல்லை விடயத்தில், சீனாவின் உரக் கப்பல் நாட்டை சுற்றிக்கொண்டிருக்கின்றது. இந்தக் கப்பலை திருப்பி அனுப்ப வேண்டும். இதிலும் கொள்ளைக்கு முயற்சிக்கின்றனர். இதில் மோசடியுடன் தொடர்புடைய நபர் யார் என்று இந்த சபையில் வெளிப்படுத்த வேண்டும்.

அதேபோன்று நாட்டின் பூமியை பாதுகாத்துள்ளீர்களா? என்றால் அதுவும் நடக்கவில்லை. உள்ளே காணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குகின்றனர்.

இவ்வாறான நிலைமையிலேயே பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்படுகின்றது. இது மிக் விமான கொள்வனவு கொடுக்கல் வாங்கலின் இரண்டாவது பாகமா என்று கேட்க வேண்டியுள்ளது.

அத்துடன் யுத்தத்தில் கணவனை இழந்த மற்றும் பிள்ளைகளை இழந்த பெண்கள் பலர் வடக்கிலும் தெற்கிலும் இருக்கின்றனர். இவ்வாறு தூபிகளை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியை இவர்களுக்கு பகிர்ந்தளித்தால் அதுவே உண்மையான யுத்த வீரர்கள் நினைவு கூரலாக அமையும்.

யுத்தத்தில் பிரேமவதி மனம்பேரி முதல், இசைப்பிரியா வரையிலான பெண்களின் நிலைமை இந்த புகைப்படத்தில் (புகைப்படமொன்றை காட்டி) காட்டப்படுகின்றது என்றார்.

# தெனியாய விபத்தில் கடற்படை வீரர் பலி



தெனியாய நகர் பகுதியிலுள்ள தெனியாய ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்படை வீரரொருவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதேவேளை விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் தெனியாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் மாகொல கடற்படை முகாமில் கடமையாற்றும் 36 வயதுடைய கொட்டபொல, கெடபருவகம பகுதியைச் சேர்ந்தவரேன உயிரிழந்துள்ளார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் மதுபோதையில் இருந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்திருப்பதாக தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாராளுமன்றத்தில் பெண்.எம்.பி.க்களின் உரிமைகள் அரசாங்க தரப்பால் மீறப்படுகின்றது

## -லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றம்சாட்டு-

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

பாராளுமன்றத்தில் பெண் எம்.பி.க்கள் பேசும்போது அரச தரப்பினர் இடையூறுகளை ஏற்படுத்தி பெண்.எம்.பி.க்களின் உரிமைகளை மீறுவதாக எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு – செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட எம்.பி. யான ரோஹிணி குமாரி விஜேரத்ன உரையாற்றிக்கொண்டிருந்தார். அவரின் உரையில் ஜனாதிபதியையும் அரசையும் கடுமையாக விமர்சனம் செய்து பேசியபோது அரசதரப்பினர் அவரது உரைக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர். குறிப்பாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அடிக்கடி எழுந்து ரோஹிணி குமாரி எம்.பி.யுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதன்போதே எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., இந்த சபையில் பெண் எம்.பி.க்கள் பேசுவதற்கு அரச தரப்பினர் அனுமதிக்கின்றனர் இல்லை. பெண்களின் உரிமைகளை அவர்கள் மதிப்பதில்லை. தமது கருத்துக்கள் முன்வைக்க பெண் எம்.பி.க்களுக்கு அரச தரப்பினர் இடமளிக்க வேண்டும். பெண்களின் உரிமைகள் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இது தொடர்பில் சபைக்கு தலைமை தாங்கும் பிரதி சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என்றார். இதன் பின்னர் ரோஹிணி குமாரி விஜேரத்ன எம்.பி. யின் உரைக்கு அரச தரப்பினர் இடையூறுகளை ஏற்படுத்தவில்லை.


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி கிருஸ்ணதயாநிதி சத்தியலோகன்



திருமதி கேமலா சிவசோதி



திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம்

எமது பணிமனையில் சனசமூக உத்தியோகத்தராக சேவையாற்றி இளைப்பாறிச் செல்லும் திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம் திருமதி கிருஸ்ணதயாநிதி சத்தியலோகன் திருமதி கேமலா சிவசோதி அவர்களை பல சிறப்புக்கள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் : ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

## தடுப்பூசி அட்டைகள் கட்டாயம்;

# பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கை

### -அமைச்சர் கெஹெலிய-



பொது இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்கும் வகையில் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்ட ஆவணங்கள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு-செலவுத் திட்ட விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வருவதால் இது தொடர்பான சட்டமூலத்தை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

## பைசர் தடுப்பூசிக்கு பதிலாக மாற்று தடுப்பூசிகளை இறக்குமதி செய்க

### -பேராசிரியர் திஸ்ஸ வலியுறுத்தல்-



இலங்கையில் பைசர் தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக, தேவையற்ற பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதாக வைரஸ் தொடர்பான விஷேட நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

பைசர் தடுப்பூசியின் செயற்பாடு தொடர்பில் விஞ்ஞான ரீதியில் தனக்கு சந்தேகம் நிலவுகின்றது.

இந்த தடுப்பூசியானது, கொரோனா பரவலுக்கு பின்னரான காலத்திலேயே முதல் தடவையாக பயன்படுத்தப்பட்டிருப்பதே இதற்கான காரணம்.

எனவே இலங்கைக்கு பைசர் தடுப்பூசியினை இறக்குமதி செய்வதனை இயலுமானளவு குறைத்துக்கொள்ளுமாறு அரசாங்கத்தை கோருகின்றேன். இதற்கு மாற்றீடாக வேறு தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்றார்.

## மதுபோதையில் அட்டகாசம் மூவர்; பொலிஸாரால் கைது



திருகோணமலை - மொரவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மதுபோதையில் வீதிகளில் அட்டகாசம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேகநபர்களை சனிக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை-மஹதிவுல்வெள பகுதியைச் சேர்ந்த 25 வயது 28 வயது மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த மூன்று சந்தேகநபர்களையும் மஹதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போது மது அருந்தியமை தெரியவந்துள்ளதாகவும் கைது செய்யப்பட்ட குறித்த நபர்கள் தொடர்பில் ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை நீதிமன்றில் பல வழக்குகள் இடம்பெற்று வருவதாகவும் மொரவெள பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த மூன்று சந்தேகநபர்களையும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொலை செய்ய முயன்றவருக்கு 2 வருட சிறை;, 50 ஆயிரம் அபராதம்

பூப்புனித நீராட்டு வைபவம் ஒன்றின் போது நபரொருவர் தமது சட்டைப் பையில் கையை விட்டமை தொடர்பில் குறித்த நபரை மூர்க்கத்தனமாகத் தாக்கி கொலை செய்வதற்கு எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நபரொருவரை விசாரணைகளின் பின்னர் குற்றவாளியாக உறுதிப் படுத்திய மத்திய மாகாண மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி சுமுது பிரமே சந்திர அவருக்கு 2 வருட சிறைத் தண்டனை விதித்து அதனை 20 வருடங்களுக்கு ஒத்திவைப்பதாக உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் குற்றவாளியாக காணப்பட்ட நபருக்கு தண்டப் பணமாக ரூபா 25,000 செலுத்த வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் மேலும் 6 மாதங்கள் சிறை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிபதி பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடாக ரூபா 50,000 செலுத்த வேண்டுமெனவும் இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் எதிரிக்கு மேலும் 2 வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்தார். இவ்வாறு தண்டனைக் குள்ளானவர் பல்லேப்பொல- எல்லேப்பொலயைச் சேர்ந்த எம்.சிறி நிமலராஜ கருணா எனும் நிமல் கொடிக்கார என்பவராவார்.

2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மாத்தளை நீதிமன்ற அதிகாரப் பிரிவிற்குட்பட்ட பல்லேப்பொல எல்லேப்பொலவில் வைத்து பிரதிவாதி இக்குற்றத்தைப் புரிந்திருப்பதாக மாத்தளை உயர் நீதிமன்றத்தில் பிரிவாதிககெதிராக குற்றம் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பூப்புனித நீராட்டு வைபவமொன்றில் கலந்து கொண்டு மது போதையிலிருந்த பிரதிவாதி இக்குற்றத்தைப் புரிந்திருப்பதாக நீதிமன்ற விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

## திருமணம் செய்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி



திருமணம் செய்து கொள்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதாவது 2019ஆம் ஆண்டில் 163,378 பதிவுத் திருமணங்கள் இடம்பெற்ற நிலையில் 2020ஆம் ஆண்டில் பதிவு திருமணங்களின் எண்ணிக்கை 143,061 ஆகக் காணப்பட்டது.இதன் பிரகாரம் பதிவு திருமணங்களின் எண்ணிக்கை 20,317ஆக குறைந்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2020 இல் அதிகளவாக 14,617 திருமண பதிவுகள் கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்றிந்ததாகவும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## பிறப்பிலேயே தனது இரு கால்களையும் இழந்த மாணவி பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்

பிறப்பிலேயே தனது இரு கால்களையும் இழந்த பதுளைப் பகுதி கிராமத்தின் மாணவியொருவர், க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்று, பல்கலைக்கழகத்திற்கு பிரவேசித்து சாதனை படைத்துள்ளார்.

பதுளைப் பகுதியின் ரில்பொல என்ற கிராமத்தைச் சேர்ந்த மதுசிகா தில்ருக்சி என்ற மாணவியே, கல்வியில் சாதனைப் படைத்தவராவார். அதே கிராமத்தின் தர்மராஜ மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய இம் மாணவி, மூன்று பாடங்களிலும் 'ஏ' தரங்களில் சித்தி பெற்று, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருந்தார். எனக்கு இரு கால்களும் இல்லையென்று தாழ்வு மனப்பான்மை கொள்ளவில்லை.அத்துடன் எனது கல்வி மேம்பாடுகளுக்கு எனக்கு கால்கள் இல்லாமை இடையூறாகவும் இருக்கவுமில்லை. எனது பல்கலைக் கழக பிரவேசத்திற்கு, எனது பெற்றோரும்,ஆசிரியர்களுமே காரணமாகும். நாட்டிற்கு அதி சிறந்த சேவையாற்ற வேண்டுமென்றஇலக்கை நோக்கியே, எனது கல்விப் பயணம் உள்ளது என்று பெருமிதத்துடன் மதுசிகா தில்ருக்சி என்ற அம் மாணவி கூறினார்.

## இந்திய நனோ நைதரசன் திரவ பசளையால் எந்தவித பயனும் இல்லை

### -வாழைச்சேனை விவசாயிகள் கவலை-



வாழைச்சேனை கமநல சேவை நிலையத்திற்குட்டபட்ட விவசாய செய்கை வேளாண்மைக்கு இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை தெளித்த நிலையில் இதுவரை பத்து வீதம் கூட எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளுக்கு யூரியா இரசாயன உரத்திற்கு பதிலாக இந்தியாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த நஞ்சற்ற நனோ நைதரசன் திரவப்பசளையை அறிமுகப்படுத்தல் மற்றும் பாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கானது விவசாய இராஜாங்க அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் நனோ நைதரசன் உர உற்பத்தி நிறுவனத்தின் விவசாய சேவைகள் தலைமை அதிகாரி கலாநிதி. தருனேந்து சிங்,விசேட நிபுணர் கலாநிதி.அனில் குமார்,விசேட வெளிக்கள பிரதிநிதிகளான சுப்ரமணியன் மாரியப்பன் மற்றும் சிவலிங்கம் பரஞ்சோதி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை அடம்படிவட்டவான் கண்டத்திலுள்ள வயற்காணி ஒன்றினுள் நனோ நைதரசன் திரவப்பசளை எவ்வாறு விசிற வேண்டும் என்பது தொடர்பான செய்முறை பிரயோக பயிற்சி ஒன்றும் செய்து காட்டப்பட்ட நிலையில் எட்டு நாட்கள் கடந்த நிலையில் இதுவரையில் நனோ நைதரசன் திரவப்பசளை தெளிக்கப்பட்ட வேளாண்மையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களால் தெளிக்கப்பட்;ட வேளாண்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் ஏனைய விவசாயிகள் நாங்கள் எவ்வாறு இதனை பெற்றுக் கொண்டு எங்களது வயல் நிலங்களுக்கு பயன்படுத்துவது?

எனவே, நனோ நைதரசன் திரவப் பசளை தெளிக்கப்பட்ட வேளாண்மையில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வகையில் நனோ நைதரசன் திரவப் பசளையை விவசாயிகள் பெற்றுக் கொள்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். வாழைச்சேனை கமநல சேவை நிலையத்திற்குட்டபட்ட இருபத்தைந்து விவசாய கண்டத்தில் 21350 ஏக்கர் பெரும்போக விவசாய செய்கையை 4850 விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு இடம்பெற்றால் விவசாயிகள் நிலைமை கேள்விக்குறியாகி விடும்.

அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி நாங்கள் விவசாய செய்கையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொண்டோம். ஆனால் எமக்கு வழங்கப்பட்ட நனோ நைதரசன் திரவப் பசளையில் எந்தவித பயனும் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. எனவே விவசாய செய்கையை திறம்பட மேற்கொள்ள அரசாங்கம் எங்களுக்கு யூரியா உரத்தினை வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பது யார்; விமர்சிப்பவர்களிடம் ஹரீஸ் கேள்வி

பா. கிருபாகரன்



முஸ்லிம் சமூகம் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத பல பிரச்சினைகளை தற்போது எதிர்கொண்டு வருவதாக குறிப்பிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட எம்.பி.யுமான எச்.எம்.எம். ஹரீஸ் அரச எதிர்ப்பு அரசியல் செய்துவந்தால் இந்த பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேசி தீர்ப்பது யாரெனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

முஸ்லிம் சமூகம் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டம் உட்பட பல பிரச்சினைகளுக்கு எமது சமூகம் முகம் கொடுத்து வருகின்றது. இந்நிலையில் முஸ்லிம் அரசியல் வாதிகள் என்ற வகையில் இந்த பிரச்சினைகளுக்கு அரசுடன் பேசித் தீர்த்துவைப்பதா அல்லது இந்த பிரச்சினையை பேசி முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்லயம் அடைவதா என்ற இரண்டு நிலைமையில் இருக்கின்றோம்.

எமது மூத்த முஸ்லிம் அரச தலைவர்கள் அன்று முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை அவர்கள் ஆளும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்த்த வரலாறு இருக்கின்றது.

அதேபோன்றுதான் தற்காலத்தில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலத்தில் கொரோனா தொற்றினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக நாங்கள் அனைவரும் குரல்கொடுத்தோம். 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்துக்கு வாக்கெடுப்புக்கு வந்தபோது, அரச தலைவர்களுடன் கலந்துரையாடி எமது ஜனாஸா எரிப்பு, முஸ்லிம் தனியார் சட்ட பிரச்சினை போன்ற அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு பொதுவான பொறிமுறை அமைக்கவேண்டும் என தெரிவித்து முஸ்லிம் காஸ்கிரஸ் உறுப்பினர் 4பேரும் மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் 3பேரும் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தோம்.

அதேபோன்று முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட பிரச்சினை வந்தபோது அதுதொடர்பில் நீதி அமைச்சருடன் கலந்துரையாடி அதில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஒருநாடு ஒரு சட்டம் தொடர்பான செயலணியின் தலைவராக ஞானசார தேரரை நியமித்ததன் மூலம் எம்மை பெரும் கோபத்துக்கு ஆளாக்கி இருந்தது. என்றாலும் அமைச்சர் அலி சப்ரியுடன் நாங்கள் இதுதொடர்பாக கலந்துரையாடினோம். அதன் மூலம் அமைச்சர் ஜனாதிபதி, பிரதமருடன் சமாத்தியமான முறையில் பேசி, செயலணியின் அதிகாரங்கள் முழுமையாக குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எல்லை நிர்ணய ஆணைக் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில் எமது காணிகள் தொடர்பான தீர்மானத்தை அதுவே எடுக்கப்போகின்றது. அரசாங்கத்தின் தீர்மானங்களுடன் இவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கும் முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமே எமது பூர்விக இடங்களை பாதுகாத்துக்கொள்ளலாம். அவ்வாறு இல்லாமல் நாங்கள் அரச எதிர்ப்பு அரசியல் செய்துவந்தால் இந்த பிரச்சினைகளை அரசாங்கத்துடன் யார் பேசித்தீர்ப்பது என்பதை எம்மை விமர்சிப்பவர்கள் கூற வேண்டும் என்றார்.

## நான்கு திட்டங்களுக்கு நேரடி வெளிநாட்டு நிதியுதவிகள் செலவு; கோபா குழுவில் தெரியவந்தது

பா.கிருபாகரன்

திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு அறிவிக்காமல் நான்கு திட்டங்களுக்கு நேரடி வெளிநாட்டு நிதியுதவிகள் செலவு செய்யப்பட்டமை குறித்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் தெரியவந்தது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கூடிய போது 2017, 2018, 2019 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக சுற்றாடல் துறை அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டபோதே இது குறித்த தகவல்கள் வெளியாகின.

9.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மூன்று திட்டங்கள் மற்றும் 1.86 மில்லியன் யூரோ பெறுமதியான திட்டங்களே இவ்வாறு நேரடி நிதியுதவியின் கீழ்முன்னெடுக்கப்படுவதாக அறியப்பட்டிருந்தது. எனினும், இத்திட்டங்கள் குறித்து வெளிநாட்டுவளங்கள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிதியுதவிகள் கிடைக்கும் போதும் அவற்றை செலவு செய்யும் போதும் அதுபற்றி திறைசேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோபா குழு, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

அத்துடன், அரசாங்க வைத்தியசாலைகளின் இரசாயனக் கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் சுற்றாடலுடன் கலப்பதினால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசு தொடர்பில் கவனம் செலுத்துவது குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் கோபா குழுவில் தெரிவிக்கப்பட்டது.இது தொடர்பில் உரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருவதாக குழுவில் ஆஜராகியிருந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதேநேரம், இலத்திரனியல் கழிவுகளை முகாமைத்துவம் செய்வது ஒழுங்குபடுத்த வேண்டியமுறை, உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்துக்கு அரசாங்கம் கையகப்படுத்தியுள்ள காணிகளின் இழப்பீடுகள் தொடர்பான மேலதிக கொடுப்பனவுக்கான வட்டிகளைச்செலுத்துவது, கங்கைகளைப் பாதுகாப்போம் தேசிய சுற்றாடல் வேலைத்திட்டத்தின் தற்போதை நிலைமைகள் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக அபேசிங்க, நிரோஷன் பெரேரா, கலாநிதி ஹரிணி அமரசூரிய, வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, மொஹமட் முஸம்மில் மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குளிர்கால கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே வேளாண் சட்டங்களை இரத்து செய்யவேண்டும்




இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே வேளண் சட்டங்களை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என தி.மு.க. தீர்மானம் நிறை வேற்றியுள்ளது. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் மூன்று புதிய வேளாண் சட்டங்களை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி நிறைவேற்றியது. விவசாயிகளின் நலனுக்கு எதிராக உள்ளதாக இதனை எதிர்த்து தலைநகர் டெல்லியில் விவசாயிகள் கடந்த ஓராண்டுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வந்தனர்.

இதனை யடுத்து, புதிய வேளாண் சட்டங்கள் மீளப் பெறப்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். அத்தோடு, குளிர்கால கூட்டத்தொடரில் இவை நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

இந்த நிலையிலேயே, நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் முதல்நாளிலேயே வேளாண் சட்டங்களை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என்று தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## பொலிஸ் ஆட்சேர்ப்பு தேர்வில் முக கவசத்திற்குள் கருவி பொருத்திய நபரை தேடுகின்றது பொலிஸ்



இந்தியாவின் - புனேவில் காவலர் எழுத்து தேர்வில் முகக் கவசத்தில் கருவி பொருத்தி முறைகேட்டில் ஈடுபட முயன்றவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பிம்பிரி சின்ச்வாட் நகரில் உள்ள ப்ளூ ரிட்ஜ் பள்ளியில் கான்ஸ்டபிள் பணிக்கான எழுத்துத் தேர்வு நடந்தது. தேர்வு எழுத வந்தவர்களிடம் நடத்திய சோதனையில்

ஒருவரின் முகக் கவசத்தில் பேட்டரி, மைக், சிம் கார்டு உள்ளிட்ட கருவிகள் பொருத்திய எலக்டாரனிக் சாதனம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. முறைகேட்டில் ஈடுபட முயன்றவர் தப்பியோடிய நிலையில் அவரை தேடி வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். அதே போல் மற்றொரு தேர்வு மையத்தில் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

# தமிழகம் முழுவதும் சுமார் 50ஆயிரம் மையங்களில் மெகா தடுப்பூசி முகாம்



தமிழகத்தில் நேற்று 10 வது மெகா தடுப்பூசி மையம் அமைக்கப்பட்டு பொதுமக்களுக் கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. காலை 7 மணி முதல் சுமார் 50,000 மையங்களில் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப் பட்டு வருகிறது. தற்போதைய நிலவரப்படி, தமிழக சுகாதாரத்துறையிடம் 1.19கோடி டோஸ் கையிருப்பில் இருப்பதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. இதனிடையே, சென்னை திருவொற்றியூரில் மெகா தடுப்பூசி முகாமை துவக்கி வைத்து பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழகத்தில் இது வரை 6கோடியே 49இலட்சத்து18 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போடப் பட்டுள்ளதாக கூறினார்.

# சைபர் கிரைம் வழக்குகளில் தொடர்புடைய, நைஜீரிய குடியுரிமை பெற்ற நபர் கைதானார்





இந்தியாவில் சைபர் குற்றங்களில் ஈடுபட்டிருந்த நைஜீரிய குடியுரிமை பெற்ற முக்கிய நபரை டெல்லி பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.


வாட்ஸ் ஆப் நம்பரை ஹேக் செய்து, அந்த நபர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதால் பணம் தேவை என்று கூறி, வங்கி கணக்குக்கு பணத்தை அனுப்புமாறு, வாட்சப் தொடர்பில் இருப்பவர்களுக்கு மெசேஜ் அனுப்புவான்.

இது தொடர்பான புகார்களையடுத்து விசாரணையில் இறங்கியடெல்லி சைபர் கிரைம் பொலிசார், மோசடியில் ஈடுபட்டு வந்த நைஜீரிய நாட்டை சேர்ந்த நபரை கைது செய்துள்ளனர்.

மோசடி மூலம் சேர்த்த பணத்தை பெங்களூரில் உள்ள வங்கிக் கணக்கு ஒன்றில் அவன் போட்டு வைத்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

அவனிடமிருந்து 4 செல் போன்கள் 8 ஏடிஎம் அட்டைகள், பல்வேறு சிம்கார்டுகள், போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# விசாகப்பட்டினத்தில் ரூ.2.5 கோடி பெறுமதியான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது -2 பேர் கைது




தமிழகம் - விசாகப்பட்டிணத்தில் வாகனம் ஒன்றில் 3 ஆயிரத்து 402 கிலோ கஞ்சா கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கஞ்சா பறிமுதல் செய்யப் பட்டது.

மடுகுலா கிராம எல்லையில் சோதனையில் ஈடுபட்ட சிறப்பு அமுலாக்கப்பிரிவு அதிகாரிகள் சந்தேகத்திற்கு இடமாக வந்த டெம்போவை சோதனையிட்ட போது 81 பைகளில் கஞ்சா சிக்கியுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு இரண்டரை கோடி ரூபாய் வரை இருக்கும் என்றும், கைதான 2 பேரும் கூலிக்கு பணியமர்த்தப்பட்டவர்கள் என்றும் முக்கிய குற்றவா ளிகளை தேடி வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

விசாகப்பட்டினம் மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவில் இதுதான் அதிகபட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சனிதா — சனிக்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2021.11.20 — சீட்டிழுப்பு இல: 3730 — வர்ணம்: பச்சை — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,623,320/- — வெற்றி இலக்கங்கள் 09 23 24 74 — ஆங்கில எழுத்து J — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 103 — சீட்டிழுப்பு திகதி 2021.11.20 — சனிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 07 21 41 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,496,280/-

சனிதா — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2021.11.19 — சீட்டிழுப்பு இல: 3729 — வர்ணம்: செம்மஞ்சள் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,739,540/- — வெற்றி இலக்கங்கள் 24 42 54 68 — ஆங்கில எழுத்து D — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி — சனிக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1395 — வர்ணம்: மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி: 2021.11.20 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,768,300/- — வெற்றி இலக்கங்கள் 10 21 54 73 — ஆங்கில எழுத்து P — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1569 — நிறம் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2021.11.20 — தினம் சனிக்கிழமை — வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 02 14 21 68 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,685,660/-

அத கோடிபதி — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1394 — வர்ணம்: ஊதா — சீட்டிழுப்பு திகதி: 2021.11.19 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,980,280/- — வெற்றி இலக்கங்கள் 35 37 60 59 — ஆங்கில எழுத்து Y — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1568 — நிறம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2021.11.19 — தினம் வெள்ளிக்கிழமை — வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 36 39 58 59 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,928,720/-

கோடிபதி — ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் H 06 09 46 66 — சீட்டிழுப்பு வாரம் 767 — வர்ணம் பச்சை — திகதி 2021. 11. 19 — வெள்ளிக்கிழமை — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,128,340/- — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,614,755/-

ராசி அதிர்ஷ்டம் — திகதி : 2021-11-20 — வெற்றி வாரம் : 3281 — வர்ணம் : இள நீலம் — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,180,905/- — வெற்றி இலக்கங்கள் 13 35 40 52 — துலாம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,910,720/-

ராசி அதிர்ஷ்டம் — திகதி : 2021-11-19 — வெற்றி வாரம் : 3280 — வர்ணம் : நீலம் — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/- — வெற்றி இலக்கங்கள் 03 07 10 29 — கடகம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,209,380/-

සංවර්ධන වාසනාව — அபிவிருத்தி அதிர்ஷ்டம் — திகதி : 2021-11-20 — வெற்றி வாரம் : 461 — வர்ணம் : சிவப்பு — சுப்பர் ஜக்பொட் ரூ. 10,882,756/- — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 66 38 30 — விதி எண் 4 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,589,480/- — எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,989,156/- — 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை — www.dlb.lk

# சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் 40 பேர் உயிரிழந்துள்ளனர் - அமெரிக்கா கண்டனம்..!



சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் போராட்டங்களில் உயிரிழந் தவர்கள் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்திருக்கின்றது.

இந்த நிலையில், சூடானில் மீண்டும் அப்துல்லா ஹம்டோ தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடைபெற வழிவகை செய்ய வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள சூடானில் கூட்டணி ஆட்சியை கவிழ்த்து கடந்த மாதம் 25 ஆம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப் பற்றியது.

இந்த ஆட்சியின் தலைவராக இராணுவ தளபதியான ஜெனரல் ஃபடக் அல்-பர்ஹன் செயற் பட்டு வருகிறார்.

இதனையடுத்து, இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து சூடானின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சூடான் இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டிற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் சூடானில் மீண்டும் அப்துல்லா ஹம்டோ தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடைபெற வழிவகை செய்ய வேண்டும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# மத்திய வங்கியின் பணவீக்கத்தை தடுக்க பாகிஸ்தான் நடவடிக்கை..!




அதிகரித்துக் கொண்டிருக்கும் பணவீக்கத்தை தடுப்பதற்காக வங்கிகளுக்கான திட் டமிடப்பட்ட பண இருப்புத் தேவையை ஒரு சதவீதத்தினால் பாகிஸ்தான் மத்திய வங்கி உயர்த்தியுள்ளது. இது 13 ஆண்டுகளில் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

பாகிஸ்தான் மத்திய வங்கியானது இரண்டு வாரங்களுக்கு அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகளால் பராமரிக்கப் படும் சராசரி பண இருப்புத் தேவையை 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகவும், குறைந்தபட்ச இருப்புத்தேவையை ஒவ்வொரு நாளும் 3 சதவீதத் திலிருந்து 4 சதவீதமாகவும் வைத்திருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளது. திருத்தப்பட்ட சராசரி இருப்பே தேவையான 6 சதவீதமானது உடனடியாக அமுலாக்கப்பட்டுள்ள அதேசமயம் திருத்தப்ப ட்ட தினசரி குறைந்தபட்ச இருப்புத் தேவையான 4 சதவீதமும் சொற்ப நாட்களில் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

வங்கி அமைப்பில் அதிகப்படியான பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்த 13 ஆண்டுகளில் முதல் முறையாக வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தினை மத்தியவங்கி உயர்த்தியது. இது பணவீக்கத்திற்கு பங்களிப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளதாக ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பரில் 9 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஒக்ரோபரில் 9.2 சதவீதமாக அதிகரித்தது, ஏனெனில் பாக்கிஸ்தானியர்கள் எரிசக்தி மற்றும் உணவுக்காக அதிக பணம் செலுத்தினர் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அத்துடன், 2021-2022 நிதியாண்டில் பணவீக்கம் நெருக்கடியான முறையில் உயர்ந்திருக்கும்

என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த ஆண்டின் கடுமையான கொரோனா நெருக்கடிகள் காரணமாக கீழ் நிலையில் இருந்த பொருளாதாரம் சுறுசுறுப்பாக மீண்டு வருவதால், பணத்திரட்டுகளின் வளர்ச்சி உட்பட கொள்கை அமைப்புகளை படிப்படியாக சீராக்க வேண்டிய அவசியம் உள்ளது


என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. அண்மைய மாதங்களில், பண வழங்கல் வளர்ச்சி மாற்றம் கண்டுள்ளது. இதனால் பண விநியோக வளர்ச்சியானது உள்நாட்டு தேவையை குறைக்கும். அதன் மூலம் தற்போதைய பொருளாதார மீட்சியை தக்கவைக்கவும், அரசாங்கத்தின் நடுத்தர கால பணவீக்க இலக்கை அடையவும்,

ரூபா மீதான அழுத்தத்தை குறைக்கவும் உதவும் என்றும் ஜியோ நியூஸ் தெரிவித்து ள்ளது. மேலும், டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியானது 176 ஆக உள்ள நிலையில் இறக்குமதியாளர்கள் பணம் செலுத்துவதற்கு டொலர்களின் தேவை அதிகரித்து.

இதனால் ரூபாவின் மதிப்பு நெருக்கடியில் உள்ளது. தவிரவும் 6 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பில் கவலைகள் உள்ளன.

# இனவெறிக்கு எதிரான போராட்டத்தில் இருவர் சுட்டுக் கொல்லபட்ட சம்பவம்

## -நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து போராட்டம்-




அமெரிக்காவில் இனவெறிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் குற்றவாளி விடுவிக்கப்பட்டதை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கார் நிறுத்துமிடத்தில் பொலிஸார் முடக்கியுள்ளனர்.

கடந்தாண்டு இனவெறிக்கு எதிராக விஸ்கான்சினில் போராட்டம் வெடித்த போது, அங்குள்ள கார் ஷோரூமில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த கைல் ரிட்டன்ஹவுஸ்என்ற 18 வயது இளைஞர் தன்னைத் தாக்கிய இருவரை தானியங்கி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். தற்காப்பிற்காக அவர் துப்பாக்கி சூடு நடத்தியதால் நீதிமன்றம் அவரை விடுவித்தது. இந்தத் தீர்ப்பை கண்டித்து போர்ட்லேண்ட்-டில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிசாரை முற்றுகையிட்டனர். பின்வாங்கிய பொலிஸார் கார்கள் நிறுத்தப்படும் காரேஜுக்குள் முடங்கினர்.

# நான்கு காதுகளுடன் பிறந்துள்ள பூனைக் குட்டி!



துருக்கியில் 4 காதுகளுடன் பூனைக் குட்டி ஒன்று பிறந்திருப்பதாக சர்வதேச செய்தி கள் தெரிவிக்கின்றன.

மிடாஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த பூனைக் குட்டி, மரபணு குறைபாடு காரணமாக 4 காதுகள் மற்றும் குறைபாடுள்ள தாடையுடன் பிறந்துள்ளது.

6 குட்டிகளில் ஒன்றாக பிறந்த இந்த பூனைக் குட்டியை ஒரு தம்பதி எடுத்து வளர்த்து வருகின்றனர். இந்த மரபணு குறைபாடு காரணமாக பூனைக் குட்டிக்கு உடல் ரீதியாக எந்த பாதிப்பும் இல்லை எனவும் சாதாரண பூனைகளைப் போலவே நன்றாக காது கேட்கும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ள நிலையில்,

மிடாஸ் பூனைக்குட்டி இணையத்தில் பிரபலமடைந்து வருகின்றது.

# அமெரிக்க வரலாற்றில் அதிபரின் அதிகாரத்தைப் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை பெற்ற கமலா ஹாரிஸ்



அமெரிக்க வரலாற்றில் அதிபரின் அதிகாரத்தை பெற்ற முதலாவது பெண் என்ற பெருமையினை துணை அதிபர் கமலா ஹரிஸ் பெற்றிருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வழக்கமான உடல்நலம் சார்ந்த மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டபோது

அவரது அதிபர் அதிகாரம் கமலா ஹாரிஸுக்கு சிறிது நேரம் வழங்கப்பட்டது. இதனை அடுத்து தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட கமலா ஹாரிஸ்,

85 நிமிடங்களுக்கு அதிபர் பொறுப்பில் இருந்தார். அந்த சமயத்தில் பைடனுக்கு கொலோனோஸ்கோபி என்ற பரிசோதனைக்காக மயக்க மருந்து செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதிபர் பொறுப்பிலிருந்த கமலா ஹாரிஸ், வெள்ளை மாளிகையின் மேற்கு வளாகத்தில் உள்ள தன் அலுவலகத்திலிருந்து கொண்டே, அதிபர் பொறுப்புக்கான பணிகளை மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்நிலையில், சிகிச்சைக்குப் பிறகு அதிபர் ஜோ பைடன் ஆரோக்கியமாக இருப்ப தாகவும், அவர் தனது கடமைகளைச் செய்யும் திறனோடு உள்ளதாகவும் பைடனின் மருத்துவர் அறிக்கை வெளியிட்டார்.

# எல்லையை தாண்டி அமெரிக்காவுக்குள் நுழைய லொறிகளுக்குள் பயணித்த புலம்பெயர் மக்கள்.!



சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைவதற்காக இரு கன்டெய்னர் லொறிகளில் பய ணித்த நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்த மக்களை, மெக்சிகோ அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். சுகாதாரமின்றி காணப்பட்ட அந்த லாரிகளுக்குள், குழந்தைகள், பெண்கள், கர்ப்பிணிகள் உட்பட ஏராளமானோர் முகக்கவசமும் அணியாமல் பயணித்துள்ளனர். இதில், பலருக்கு காய்ச்சல் இருப்பதை அறிந்த அதிகாரிகள், அவர்களின் விவரங்களை பதிவுசெய்துகொண்டு, அனைவருக்கும் மருத்துவ பரிசோத னையும் சிகிச்சையும் அளிக்க ஏற்பாடு செய்தனர். கௌதமாலா, ஹோண்டுரஸ், எல் சால்வடோர், ஹைதி, டொமினிக், பங்களாதேஷ். உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இவர்கள், மெக்சிகோவின் எல்லையைத் தாண்டி, அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைய திட்டமிட்டிருந்தனர்.

# சிங்கப்பூரில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வு!



கொரோனா பரவல் குறைந்ததன் காரணமாக சிங்கப்பூரில் கொரோனா கட்டுப்பாடுகளி ல் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஒக்ரோபர் மாத இறுதியில், தினசரி கொரோனா பாதிப்புகள் 5000 இற்கும் அதிகமாக இருந்த நிலையில், கடந்த சில நாட்களாக அந்த எண்ணிக்கை 2000 இற்கு கீழ் வந்துள்ளது. மேலும் சிங்கப்பூரில் 85 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு 2 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது உணவகங்களில் தடுப்பூசி செலுத்திய இருவர் மட்டுமே அருகருகே அமர்ந்து உணவருந்த அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில்,

திங்கட்கிழமை முதல் 5 பேர் வரை சேர்ந்து அமர்ந்து உணவருந்தலாம் என தெரிவி க்கப்பட்டுள்ளது.

# தெஹ்ரீக் இ-லப்பைக் அமைப்பின் தடையை நீக்கும் பாகிஸ்தானின் முடிவுக்கு எதிர்ப்பு



தெஹ்ரீக் இ-லப்பை அமைப்பின் தடையை நீக்குவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானமானது தங்களை பலிகடா ஆக்கும் ஒரு செயற்பாடு என்றும், கடமையின் போது செய்த தனிப்பட்ட தியாகங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் பாகிஸ்தான் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்பான தெஹ்ரீக் இ-லப்பைக் மீதான தடையை நீக்கியதாக பாகிஸ்தான் அண்மையில் அறிவித்தது. இந்த முடிவு சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகி யுள்ளது. ஹ்ரீக் இ-லப்பைக் அமைப்பானது,

அண்மையில் பஞ்சாப் மாகாணத்தில் போராட்டங்களை நடத்தியது. போராட்டத்தின் போது ஹ்ரீக் இ-லப்பைக் உறுப்பினருக்கும் அதிகாரிகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டதை அடுத்து வன்முறைகள் வெடித்தன. இதன் விளைவாக ஆறு பொலிஸார் கொல்லப்பட்டதோடு 520 பேர் காயமடைந்தனர் என பஞ்சாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கொவிட்-19 முடக்கல் உத்தரவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளில் வெடித்த போராட்டம்




ஒஸ்திரிய அரசாங்கம் கடந்த திங்கள் கிழமை முதல் நாடுதழுவிய முடக்கல் நிலையை அறிவித்ததை அடுத்து, தீவிர வலதுசாரி குழுக்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் சனிக்கிழமையன்று தலைநகர் வியன்னா வழியாக அணிவகுத்துச் சென்றனர்.

ஆஸ்திரியா மட்டுமல்லாது வைரஸ் கட்டுப்பாடுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் சுவிட்சர்லாந்து, குரோஷியா, இத்தாலி, வடக்கு அயர்லாந்து மற்றும் நெதர்லாந்திலும் சனிக்கிழமை நடந்தன. மேற்கண்ட நாடுகளில் கட்டாய தடுப்பூசி அமுல், கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள்

மற்றும் கட்டாய கொவிட்-19 அனுமதி அட்டை என்பவற்றுக்கு எதிராக எதிர்ப்பாளர்கள் அணி திரண்டனர். ஒஸ்திரியாவில் திங்கள் முதல் அமுலுக்கு வரும் முடக்கல் நில குறைந்தது 10 நாட்களுக்கு நீடிக்கும். மளிகை பொருட்கள் வாங்குவது, மருத்துவரிடம் செல்வது அல்லது உடற்பயிற்சி செய்வது உள்ளிட்ட

குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டுமே மக்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேற முடியும். பெப்ரவரி 1 முதல் தடுப்பூசி செலுத்துவதை அந் நட்டு அரசாங்கம் கட்டாய மாக்குகிறது. ஆஸ்திரியாவின் 8.9 மில்லியன் மக்களில் 66 சதவீதம் பேருக்கு முழுமையாக தடுப்பூசி போடவில்லை, இது மேற்கு ஐரோப்பாவில் மிகக் குறைந்த விகிதங்களில் ஒன்றாகும்.

# ஆப்கானிஸ்தானில் 20 சதவீத சிறுவர்கள் குழந்தை தொழிலாளிகளாக மாறியுள்ள அவலம்



ஆப்கானிஸ்த்தானில் வறுமையினால் சுமார் 20 வீதமான சிறுவர்கள் குழந்தை தொ ழிலாளிகளாக மாறியிருக்கின்றனர்.

20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற போரால் ஏராளமான குடும்பங்கள் உடமைகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளன.

பெற்றோர் பலர் வேலை இழந்ததால், குடும்பத்தின் வறுமையை போக்க சிறுவர்கள் திண்பண்டங்கள் விற்றும், கார்களைத் துடைத்தும், ஷூ பொலிசெய்தும்,

குப்பை கூளங்களில் இருந்து மறுசுழற்சிக்குத் தேவைப்படும் பொருட்களை சேகரித் தும் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு 5 மணி நேரத்துக்கும் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.